வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 22.06.2022 புதன்கிழமை | இதழ் : 198 | பக்கங்கள் : 16

## மேலும் 5.75 மில்லியன் டொலரை இலங்கைக்கு வழங்குகிறது அமெ.

கொழும்பு, ஜூன். 22

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக 5.75 மில்லியன் டொலர்கள் புதிய நிதியுதவியை அமெரிக்கா அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அமெரிக்க அரசாங்கம் மூன்றாவது தவணை புதிய நிதியுதவியை இன்று அறிவித்தது.

இந்த மனிதாபி

15

## சவர்க்காரம், பற்பசை மீண்டும் விலையுயர்வு

கொழும்பு, ஜூன் 22

சவர்க்காரம், பற்பசை, நூடில்ஸ் உள்ளிட்ட அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் மீண்டும் சந்தைகளில் விலை அதிகரித்துள்ளன.

இரு வாரங்களுக்கு முன்னர் விலை அதிகரிப்பால் 135 ரூபாயாக உயர்ந்த குளியல் சவர்க்காரம் தற்போது 185 ரூபாயாக மீண்டும் அதிகரித்துள்ளது.

இதேபோன்று, நடுத்தர அளவுள்ள பற்பசை 185 ரூபாயாகவும், 160 கிராம் எடைகொண்ட

15

## பணவீக்கம் 45 வீதமானது

கொழும்பு, ஜூன் 22

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மூலம் கணக்கிடப்பட்ட மே மாதத்துக்கான பணவீக்கம் 45.3வீதமாக அதிகரித்துள்ளது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்

15

### சிங்கள பௌத்தர்களின்

# பொறுமைக்கும் எல்லை உண்டு!



### கூட்டமைப்பினரை பகிரங்கமாக எச்சரித்தார் சரத் வீரசேகர எம்.பி.

**கொழும்பு, ஜூன். 22**

**இலங்கையில் சிங்கள மக்களின் பொறுமைக்கு எல்லை இருப்பதாகவும், அதனைக் கேலிக்கு உட்படுத்தவேண்டாம் எனவும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

**பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.**

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர், முல்லைத்தீவு - குருந்தூர் மலையில் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்வதற்கு எதிர்ப்பு வெளியிட்டமையை தாம் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிரபாகரனின் கட்சி எனவும் அவர் சாடினார்.

கோணகல கிராமத்தில் 54 சிங்களவர்கள் கொல்லப்பட்டபோது, கொழும்பில் இந்து மத வேல் திருவிழா இடம்பெற்றிருந்தது. எனினும் வடக்கில் பௌத்த நடைமுறைகளுக்கு கௌரவம் வழங்கப்படவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் நாக விஹாரையில் புத்த பெருமான் சிலையை நிறுவுவதற்கும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இந்தநிலையில், குருந்தூர் மலையில் கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் பல நூற்றாண்டுளுக்கு முற்பட்ட பௌத்த சின்னங்களாகும்.

15

## தம்மிக பெரேரா இன்று எம்.பியாக பதவியேற்பார்!

கொழும்பு, ஜூன் 22

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள கோடீஸ்வரரான தம்மிக பெரேரா, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் இன்று சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் முற்பகல் 10 மணியளவில் சத்தியப் பிரமாணம் இடம்பெறும் எனவும் அறியவருகிறது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் எம். பியாக இருந்த முன்னாள் நிதி

15

## பாராளுமன்ற அமர்வை ஒரு வாரம் புறக்கணித்தது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன். 22

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு வாரத்துக்கு பாராளுமன்ற அமர்வைப் புறக்கணிப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் அறிவித்துள்ளார்.

நாட்டில் மக்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகளுக்கு பாராளுமன்ற அமர்வில் உரிய தீர்வு கிடைக்காத காரணத்தினால் தாம் பாராளுமன்றத்தை புறக்கணிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் குறிப்பிட்டார்.

அதனை தொடர்ந்து, பாராளுமன்றில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியின்

15

## ஐக்கிய மக்கள் சக்தியின் '21' அரசமைப்புக்கு முரணானது!

### நீதிமன்ற தீர்ப்பை அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, ஜூன். 22

ஐக்கிய மக்கள் சக்தியினால் வரையப்பட்டுள்ள 21ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பல விதிகள் அரசியலமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வு நேற்று செவ்வாய்க் கிழமை காலை ஆரம்பமானதையடுத்து, அரசிய

15

## பெற்றோல் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டது!

கொழும்பு, ஜூன். 22

நாளாந்த பெற்றோல் விநியோகம் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

அதற்கமைய, நேற்றைய தினம் 1500 மெற்றிக் தொன் பெற்றோல் மாத்

15

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பியும் பாராளுமன்ற அமர்வை புறக்கணிப்பு!

கொழும்பு, ஜூன். 22

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்பனவும் பாராளுமன்ற அமர்வை ஒரு வாரத்துக்குப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளன.

இந்த பாராளுமன்றத்தால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதால் நாம் ஒருவார கால அவ

15

## எரிபொருள் விநியோகமும் அத்தியாவசிய சேவைக்குள்

கொழும்பு, ஜூன். 22

பெற்றோலிய பொருட்கள் மற்றும் எரிபொருள் விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக மாற்றும் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

அவர் முன்னாள் ஆயுத இயக்கம் ஒன்றின் ஒரு முக்கிய பிரமுகர். லண்டனில் அரச பள்ளியில் ஆசிரியராக இருக்கும் அவர், அவ்வப்போது தொலைபேசியில் தொடர்பு கொள்ளுவார்.

சில தினங்களுக்கு முன்னனர் கூட்டமைப்பின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கிய ராசபுத்திரன் இராசமாணிக்கமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் சுகாஸ/ம் சுவிற்சர்லாந்தின் அழைப்பின்பேரில் அங்கு சென்றிருந்தனர்.

இவர்கள் இருவரும் சுவிஸ் போயிருப்பது ஈழத்தமிழர்களின் பிரச்னைகளைப்பற்றி சுவிஸ் அரசாங்கத்துடன் பேசுவதற்கு என்றவாறு, இருவரினதும் ஆதரவு முகநூல் போராளிகள் தத்தம் விருப்பங்களுக்கு ஏற்றவாறு எழுதிக்கொண்டிருந்தபோது - இந்த லண்டன் நண்பரிடமிருந்து ஒரு குறுந்தகவல் வந்தது. அதனை படித்துவிட்டு நானும் அதற்கு எதிர்வினையாற்றாமல் இருந்துவிட்டேன்.

'சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்துலக ரீதியான இளையவர்களின் ஒன்றுகூடல் சுவிற்சர்லாந்தில் இடம்பெற்று வருகிறது.

ஏழுநாட்கள் நடைபெறவுள்ள இந்த ஒன்றுகூடலில் இலங்கையிலிருந்து சாணக்கியன் - சுகாஸ், ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதரக பெண் அதிகாரி , முஸ்லிம் பிரதிநிதி மற்றும் ஒரு சிங்கள பிரதிநிதி கலந்து கொண்டுள்ளனர். இங்கு, இலங்கை பிரச்னையோ அல்லது ஈழத்தமிழர் விவகாரமோ கலந்துரையாடப்படமாட்டாது என்பதுடன், பொதுவான கருப்பொருளில் மட்டுமே இக் கலந்துரையாடல் இடம்பெறும் என, சுவிற்சர்லாந்தின் தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பான முக்கிய அதிகாரி உறுதிப்படுத்தினார், சில ஊடகங்கள், இலங்கை பிரதிநிதிகளின் சுவிற்சர்லாந்து வருகை தொடர்பில் வெளியிட்டுள்ள செய்தி தொடர்பிலே இத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.'

மேலேயுள்ள தகவல்தான் அவரிடமிருந்து வந்தது. நான் அதுகுறித்து இந்தப் பத்தியில் ஏதாவது குறிப்பிடுவேன் என்பதற்ககாவே அவர் இதனை அனுப்பியிருக்கலாம். ஆனால், ஏனோ நான் அதனைக் கண்டுகொள்ளவில்லை.

நேற்று முன்தினம் அவரிடமிருந்து அழைப்பு வந்தபோது பதிலளிக்க முடியவில்லை. பல மணி நேரத்தின் பின்னர் அவரை அழைத்தபோது, அவர் வழக்கமாக பேசுகின்ற நமது அரசியல் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

ஆனால் நானோ, அவரும் தெரியவேண்டும் என்ற சில விடயங்களை சொல்லிக்கொண்டிருந்தபோது, அவற்றை அவர் ஆவலுடன் கேட்கவில்லை என்பது புரிந்தது.

அவரே பின்னர் சொன்னார், 'இல்லை, சில தலைவர்களின் பேச்சுக்களை கேட்கின்றபோது, அவர்கள் தமிழ் மக்களை எவ்வளவு முட்டாள்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள் என்பது புரிகின்றது. எனது கவலை எல்லாம் அவர்கள் முட்டாள்கள் என்று நினைக்கின்ற அந்தத் தமிழர்களில்தானோ நாமும் அடங்குகின்றோம். அதாவது, எங்களையும் முட்டாள்கள் என்றுதானே அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள்' என்று சலித்துக்கொண்டார்.

அவருடைய சலிப்பும், கவலையும் நியாயமானதுதான். அதே கவலையும் சலிப்பும் இந்த ஊர்க்குருவிக்கும் இருக்கின்றது என்று சொல்வதைவிட, வேறு பதில் இருக்கவில்லை.

தமிழ் அரசியல்வாதிகள் பற்றி, அதிலும் ஒருசில தலைவர்கள் பற்றி நாங்கள் சலித்துக்கொண்டது பற்றி எழுதிக்கொண்டிருக்கும்போதுதான், அந்தச் செய்தியையும் பார்க்க முடிந்தது.

பாராளுமன்ற அமர்வுகளை புறக்கணிக்கப்போவதாக அறிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்றத்தில் உரையாற்றிக்கொண்டிருந்த அந்த காணொளியை பார்த்துக்கொண்டிருந்தபோது, அவர் சொன்னார்:

'மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் அரசாங்கத்துக்கு தெரியவில்லை. ஆகையால், துன்பப்படும் மக்களுடன் நாங்கள் கைகோர்க்கின்றோம். ஆகையால், இந்த வார சபை அமர்வை ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணிக்கின்றது' என்று.

அத்தோடு அவர் நிறுத்தியிருந்தால் பரவாயில்லை, 'ரணில் பிரதமராக வந்த பின்னர், அதாவது புதிய அரசாங்கமும், வரிகளை அதிகரித்திருக்கின்றது. இது மக்கள்மீது மேலும் சுமையை ஏற்படுத்தியிருக்கின்றது' என்று அவர் சொன்னபோதுதான் அடடே, தமிழ் தலைவர்கள் மாத்திரமல்ல, சிங்களத் தலைவர்களும் தமது மக்களை அப்படித்தான் நினைக்கின்றார்களோ என்று எண்ணத் தோன்றியது.

நாடு இன்று இருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு, ஜனாதிபதி பதவிக்கு வந்ததும் வரிகளை குறைத்ததுதான் மூலகாரணம் என்று தொடர்ச்சியாக கூறிவந்த எதிர்க்கட்சித் தலைவர், இப்போது வரி அதிகரிப்புக்கு எதிராக குரல்கொடுப்பதைப் பார்த்தபோது, அவர்களும் தமது மக்களை முட்டாள்கள் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறார்களோ என்றும் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

**- ஊர்க்குருவி**

# குருந்தூர்மலை புத்தர் சிலை இன அழிப்பின் சிந்தனையே!

## சார்ள்ஸ் எம். பி. சபையில் சாடல்

**கொழும்பு, ஜூன் 22**

**தமிழ் மக்களின் விவசாயக் காணிகளை அபகரிக்கும் அரசு சிங்கள மக்களுக்கு மட்டுமே விவசாயம் செய்யும் உரிமையை வழங்க முயற்சிக்கிறது என்று குற்றஞ்சாட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன், இன அழிப்பின் சிந்தனையாகவே குருந்தூர்மலையில் புத்தபகவான் சிலையை நிறுவும் செயல்பாடு முன்னெடுக்கப்படுவதாகவும் கூறினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குற்றவியல் நடவடிக்கை கோவை திருத்தச் சட்டமூல விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"1932ஆம் ஆண்டு குருந்தூர்மலை தொல்லியல் இடம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டது. ஆனால், 2020 ஆம் ஆண்டு குருந்தூர்மலை தேவ விகாரை எனக் கூறிய புத்தர் சிலை வைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிங்களவர்கள் இல்லாத, பௌத்தர்கள் இல்லாத இங்கு புத்தர் சிலை வைப்பதன் முக்கிய நோக்கம் சிங்களக் குடியேற்றம் மட்டுமே. இதனைத் தற்போதைய நெருக்கடியில் இலங்கைக்கு உதவும் நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும்.



தண்ணிமுறிப்பு மக்கள் 78 ஆண்டுகளாக விவசாயம் செய்து வரும் விவசாயக் காணிகளை ஆக்கிரமிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. 1956 - 1957 ஆண்டு காலப் பகுதியில் அந்தந்தப் பிரதேச செயலகங்கள் ஊடாகவே இந்தக் காணி உரிமைகள் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அதனையே தற்போது ஆக்கிரமிக்க முயற்சிக்கப்படுகின்றது.

தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் அனைத்து மக்களையும் விவசாயம் செய்யுமாறு கூறும் அரசு தமிழ் மக்களின் விவசா யக் காணிகளை மட்டும் அபகரிக்கப் பார்க்கின்றது. இதன் மூலம் சிங்கள மக்கள் மட்டுமே விவசாயம் செய்ய வேண்டும் என்று அரசு நினைக்கின்றது.

இதேவேளை, "கோட்டா கோ கம" போராட்டக்காரர்கள் குருந்தூர்மலை புத்தர் சிலை விவகாரத்தை கருத்தில் எடுக்காமல் இருப்பது ஏன்? அவர்களின் போராட்டம் உணவுக்கும் எரிபொருளுக்கும் மட்டும் தானா? தமிழர்களின் இனம் அழிக்கப்படுகின்றது. நிலம் பறிக்கப்படுகின்றது. கலாசாரம் சிதைக்கப்படுகின்றது. இவை தொடர்பிலும் "கோட்டா கோ கம" போராட்டக்காரர்களும் இலங்கைக்கு உதவும் நாடுகளும் கவனத்தில் கொள்ள வேண்டும்" - என்றார். (ஐ)

## எரிபொருள் நிலையத்துக்குள் தீ மூட்டப்பட்ட தலைக்கவசம்!

கொழும்பு, ஜூன் 22

தலைக்கவசமொன்றை தீ மூட்டி, அதனை எரிபொருள் நிலையத்தை நோக்கி வீசிய சம்பவமொன்று கந்தானையில் அமைந்துள்ள கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளும், எரிபொருள் நிலைய ஊழியர்களும் விரைந்து செயற்பட்டு தலைக் கவசத்தில் இருந்த தீயை அணைத்தனர்.

இதனால், அங்கு ஏற்பட விருந்த பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். குறித்த எரிபொருள் நிலையத்திற்கு எரி பொருள் கிடைத் ததன் பின்னர், மக்களுக்கு விநி யோகிக்கும்போதே இந்த சம்பவம் இடம்பெற் றுள்ளது.

இந்நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன், அவரை கைது செய்வதற்காக பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (அ)

## அரசியல் இலாபம் ஈட்ட எதிர்க்கட்சியினர் முயற்சி

### நிமல் லான்சா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 22

அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை சீர்குலைத்து அரசியல் இலாபம் ஈட்டுவதில் எதிர்க்கட்சிகள் கவனம் செலுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், மக்கள் எதிர் நோக்கும் தற்போதைய பிரச்னைகளுக்கு தீர்வுகாண அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

நாட்டின் பிரச்னைகளுக்கு எந்தவொரு பிரிவினரும் பதில்களை முன்வைக்க முடியுமென்றால், அவர்களுக்கு ஆதரவளிக்க தயார்.

அரசாங்கத்தை சீர்குலைத்து அதன் அரசியல் இலக்குகளை அடையவே எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. இது அரசியல் விளையாடுவதற்கான நேரமல்ல, கூட்டாகச் செயல்பட்டு பிரச்னைகளுக்குப் பதில்தேட வேண்டிய நேரம்- என்றார். (அ)

# கிளிநொச்சியில் காணாமற்போனவர் கொக்கட்டிச்சோலையில் கண்டுபிடிப்பு

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சியில் காணாமல் போன இளைஞர் ஒருவர், மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, கனகாம்பிகைக் குளம் பகுதியைச் சேர்ந்த உதயராஜ் அம்சவர்தன் என்பவர் கடந்த 16 ஆம் திகதி காணாமல்போயிருந்ததாக கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த இளைஞன் கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றுக்கு சென்றிருந்த நிலையிலேயே காணாமற்போயிருந்தார் என குறித்த இளைஞரின் தாயாரினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த இளைஞன் மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்சேனை பகுதியில் அப்பகுதி இராணுவத்தினரால் அடையாளம் காணப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது காதலியுடன் அங்கு சென்றுள்ளதாக இதன்போது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
22.06.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆணி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# உடனடி மறுசீரமைப்பு தேவை?

அதிகரித்துச் செல்லும் பொருளாதார நெருக்கடிகள், நாட்டின் அனைத்து கட்டமைப்புக்களையும் சீர்குலைத்துவிட்டன. எரிசக்தி அமைச்சர், பெற்றோலுக்காக, மூன்று நாட்கள் வரிசையில் நிற்கவேண்டாமென்று அறி வித்திருந்தார். ஆனால், மக்கள் முன்னரைவிடவும் அதிகமாக வரிசையில் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றனர். ஓர் இரவு முழுவதும் வீதிகளில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இதனால், போக்கு வரத்துக்கும் இடையூறுகள் ஏற்படுகின்றன. அமைச்சரின் அறிவிப்புக்கு அமைய, விடயங்கள் இடம்பெறவில்லை. ஏனெனில், மூன்று நாட்கள் வரிசையில் நிற்க வேண்டாமென்று கூறிய பின்னரும் கூட, நிலையங்களில் பெற்றோல் விநியோகிக்கப்படுகின்றது.

பெற்றோல் நிலையத்தில் பணிபுரிபவர்கள் தகவல்களை வழங்க, அதற்கேற்ப மக்கள் முதல் நாளே, வரிசையில் இடம்பிடிப்பதற்காக முட்டி மோதுகின்றனர். இதேபோன்றுதான், மண்ணெண்ணெய் விடயமும். கிராம சேவையாளர்களின் மூலம் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுக்களுக்கு அமையவே மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது. ஆனால், ஒருவருக்கு எத்தனை முறைகள் வழங்கப்படுவது என்பதற்கு எவ்வித வரையறையும் இல்லை. முதல்நாள் பெற்றவர் மறுதினமும் முன்வரி சையில் நின்று எண்ணெய் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெயை ஒவ்வொருவரும் வீடுகளில் சேகரிக்கின்றனர். இதன் காரணமாகவே பெற்றோலுக்கான வரிசை தொடர்ந்தும் நீண்டுகொண்டே செல்கின்றது. பாரிய பற்றாக்குறை வந்து விடும் என்னும் அச்சத்தின் காரணமாக, எரிபொருட்களை சேகரிக்கும் பழக்கமொன்று உருவாகி விட்டது. இதன் காரணமாக தேவையுள்ள பலரால் எரிபொருளை பெறமுடியாமல் இருக்கின்றது. இவற்றைக் கட்டுப்படுத்த, முகாமை செய்ய எந்தவோர் ஒழுங்கும் அரசாங்கத்திடம் இல்லை. இது ஒரு பெரும் பிரச்னை. அதே வேளை, இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, சிலர் இதனை ஒரு வியாபாரமாகச் செய்யும் சூழலும் உருவாகியிருக்கின்றது.

இதேபோன்று பொருட்களை விற்பனை செய்வதிலும் ஒழுங்குகள் பின்பற்றப்படவில்லை. அரசாங்கம் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்திருப்பதாக அறிவித்திருக்கின்றது. ஆனால், நடை முறையில் அதனை காணவில்லை. கடைக்காரர்களோ, அந்த விலைக்கு எங்களுக்கு அரிசி வழங்கப்படவில்லையே பின்னர் எவ்வாறு நாங்கள் அரிசியை, அரசாங்கம் கூறும் விலைக்கு விற்க முடியுமென்று கேட்கின் றனர். மொத்தத்தில், அரசாங்கம் கூறுகின்ற எந்தவொரு விடயமும் நடைமுறையில் இடம்பெறவில்லை. அரசாங்கத்தின் சொல்லுக்கு மரியாதை இருப்பதாகவும் தெரியவில்லை. மாவட்ட ரீதியில் இவற்றை மேற்பார்வை செய்ய வேண்டியவர்கள் அமைதியாக இருக்கின்றனர்.

எரிபொருட்களை விநியோகிப்பதற்கு ஒரு சரியான பொறிமுறை அவசியம். இல்லாவிட்டால், இந்த பிரச்னையை ஒருபோதுமே கையாள முடியாது. எரிபொருள் குறித்த நிலையத்துக்கு வரப் போகின்றதென்னும் தகவல் வெளியாகியவுடன், மக்கள் அலை மோதுகின்றனர். பெற்றோல், மண்ணெண்ணெய் விநியோகத்திற்கு சரியான, அதே வேளை, அனை வருக்கும் பொருள் கிடைப்பதை உறுதிப்படுத்தக் கூடிய வகையிலான பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். ஜனாதிபதி ஆரம்ப நாட்களில் தான் வித்தியாசமானதொரு ஜனாதிபதியென்று காண்பிக்கும் நோக்கில், அலுவலகங்களுக்கு திடீர் விஜயங்களை மேற்கொண்டிருந்தார். அலுவலகங்களில் இடம்பெறும் தவறுகளை ஆராய்ந்து, நடவடிக்கைகளை எடுக்க முற்படுவதான தோற்றமொன்றை காண்பித்திருந்தார். ஆனால், இப்போது, அரசாங்கம் கூறும் எந்தவொரு விடயமும் நடைமுறையில் இடம்பெறவில்லை. எந்தவொரு நிர்வாக கட்டமைப்பும் ஒழுங்காக செய்யப்படவில்லை. முதலில் இந்த விடயங்களை அரசாங்கம் சரிசெய்ய வேண்டும்.

அமைச்சு ஒரு விடயத்தை அறிவித்தால், அதற்கேற்ப விடயங்கள் இடம்பெற வேண்டும். பாடசாலை விடயத்திலும் முறையான நடைமுறைகள் இல்லை. ஒரு பகுதியில் பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்படுகின்றது. மறு பகுதிகளில் பாடசாலைகள் இடம்பெறுகின்றன. அதே வேளை, பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இந்த வாரம் சமுகமளிப்பது கட்டாயமானதல்ல என்றும் அமைச்சர் கூறுகின்றார். ஆனால், மாவட்ட மற்றும் மாகாண மட்ட கல்வியதிகாரிகளோ, தங்களின் தனிப்பட்ட விருப்பங்களின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்கின்றனர். அதேவேளை, ஆசிரியர் ஒருவர், பெற்றோல் நிலையத்தில் நிற்பதாகக் கூறிவிட்டு, வீட்டில் இருக்கக் கூடிய சூழலும் காணப்படுகின்றது.

ஒன்றில், நிலைமைகள் சரிவரும் வரையில், இணைய வழிக் கல்வி முறைமையை நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது வாரத்தில் குறிப்பிட்ட நாட்கள் மட்டும் - என்னும் அடிப்படையில் பாடசாலைகளை நடத்த வேண்டும். விடயங்களில் ஒழுங்குமுறை பின்பற்றப்பட வேண்டும். ஆசிரியர் சங்கங்களும், இந்த அடிப்படையில் விடயங்களை நோக்குவதாகத் தெரியவில்லை. உண்மையில், அனைத்துமே குழம்பிக் கிடக்கின்றன. பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடியாக உருமாறியது. இப்போது, ஒட்டுமொத்த அரச நிர்வாக கட்டமைப்புக்களும் சீர்குலைந்துவிட்டன. நிலைமை இப்படியே தொடர்ந்தால், விரைவில் தடியெடுத்தவரெல்லாம் தண்டல்காரரென்னும் நிலைமையொன்று உருவாகலாம். அனைத்துமே கட்டுப்பாட்டை இழக்கலாம்.

# ஆழ்கடல் இரகசியங்கள்...!



*நம் பூமியின் 70 சதவீத பரப்பை கடல் சூழ்ந் துள்ளது. ஆனால், கடலை பற்றி நாம் அறிந்தவை மிக அரிதே. ஆனால், ஆழ்கடலில் முழுவதும் ஆராயப்படாத ஒரு பிரபஞ்சமே உள்ளது. மனித கண்களுக்கு புலப்படாதவை யாக அவை உள்ளன. கடல் குறித்து நாம் ஏன் கொஞ்சம் மட்டுமே அறிந்திருக்கிறோம்...?*

*ஆழ்கடலில் உள்ள அபரிமிதமான அழுத் தம், நீர்மூழ்கிகளுக்கும் ஆழ்கடல் உபகரணங் களுக்கும் பெரும் சவாலாக விளங்குகிறது. விண்வெளிக்கு செயற்கைக்கோளை அனுப்பு வது இதைவிட எளிதாக உள்ளது. ஆனால், நீர்மூழ்கி இயந்திர மனிதர்கள் உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்கள் மூலம், ஆழ்கடலில் மறைந்திருக்கும் இந்த சாம்ராச்சியத்தின் இரகசியங்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளன.*

**ஆழ்கடலில் உள்ள ரகசியங்கள் என்ன?**

*அதிக தண்ணீர் இருக்கிறது. கொஞ்சம் துல்லியமாக சொல்ல வேண்டும் என்றால், 1,41,91,20,000 கியூபிக் கிலோமீற்றர் அளவுக்கு தண்ணீர் இருக்கிறது. 300 கோடி மக்களுக்கு புரதசக்தியின் முக்கிய ஆதாரமாக விளங்கும் மீன்கள் அந்தத் தண்ணீரில் இருக்கின்றன. ஆனால், ஆழ்கடலில் மீன்களை தவிர இன்னும் அதிகமானவை இருக்கின்றன. இன்னோர் உலகமான ஆழ்கடலில் அசாதாரணமான பல உயிரினங்கள் வாழ்கின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆழ்கடலில் இருந்து புதிய உயிரினங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை ஜெல்லி மீன்கள், அவற்றை நீங்கள் வலைகள் மூலம் பிடிக்க முயன்றால் சிதைந்துவிடும்.*

*2020ஆம் ஆண்டில் பெரிய சிபோனோஃபோர் அபோலேமியா என்ற உயிரினத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட மில்லியன் கணக்கிலான குளோன்களால் ஆனது இந்த உயிரினம், இதன் மெல்லிய, முறுக்கப்பட்ட உடல், நீண்ட இலேசான கயிற்றை நினைவுபடுத்துவதாக உள்ளது.*

*மேலும், கடல்தளமானது, நீங்கள் கற்பனை செய்யக்கூடிய தட்டையான மற்றும் தனிச்சிறப்பில்லாத கடற்பரப்பில் இருந்து வெகுதொலைவில் உள்ளது. ஒட்டுமொத்தக் கடலும் வற்றிவிட்டால், அதன் நிலப்பரப்பு இந்த பூமியில் உள்ள எதுவொன்றுக்கும் இணையாக கண்கவரக்கூடிய ஒன்றாக இருக்கலாம். சில உயரமான சிகரங்கள், ஆழமான பள்ளத்தாக்குகள், நீளமான நதிகளை ஒத்த பெருமையை கொண்டிருக்கலாம்.*

*ஆழ்கடலில் நீர்வீழ்ச்சிகளும் உள்ளன. டென்மார்க் ஸ்ட்ரெய்ட் கேட்டராக்ட் என்பது அத்திலாந்திக் கடலில் கண்டெடுக்கப்பட்ட நீர்வீழ்ச்சியாகும். இங்கு, கிறீன்லாந்து கடலின் குளிர்ந்த நீரும் இர்மிங்கர் கடலின் வெப்பமான நீரும் சங்கமிக்கின்றன. இதில், குளிர்ந்த நீர் கீழே தள்ளப்படுவதால், அது 3,500 மீற்றர் நீளம்கொண்ட மாபெரும் நீர்வீழ்ச்சியை உருவாக்குகிறது. கடலின் மேற்பரப்பில் உள்ள யாராலும் இதனை கண்டறிய முடியாது. உலகின் மிக ஆழமான பகுதியான, 11,000 மீற்றர் நீள நீர்வீழ்ச்சியான மரியானா ஆழியுடன் ஒப்பிடும்போது இது ஒன்றும் இல்லை.*

*2020ஆம் ஆண்டில் விஞ்ஞானிகள் கண்டறிந்த ஒன்று, உலகுக்கான அபாய ஒலியாக உள்ளது. இந்த உலகில் யாராலும் செல்ல முடியாத கடல் பிளவு ஒன்றில், சுமார் 7,000 மீற்றர் ஆழத்தில் அவர்கள் புதிய ஓட்டுமீன் இனங்களை கண்டறிந்தனர். அவற்றின் வயிற்றில் பிளாஸ்ரிக் இருந்தது. அந்த பிளாஸ்ரிக்கை யூரிதீன்ஸ் பிளாஸ்ரிக் என அழைக்கின்றனர். கடல் குறித்து நாம் அறிதாகவே ஆராயத் தொடங்கியிருக்கும் நிலையில், நம் விளைவுகளால் அதன்மீது ஏற்படும் தாக்கங்களை ஏற்கெனவே உணரத்தொடங்கிவிட்டோம். 2050 ஆம் ஆண்டில் கடலில் மீன்களைவிட அதிக பிளாஸ்ரிக்குகள் இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.*


*ஆனால், பிளாஸ்ரிக் மட்டுமே பிரச்னை அல்ல. காலநிலை மாற்றம் கடலின் அடிப்படை வேதித்தன்மையை மாற்றுகிறது, கடலை வெப்பமாக்குகிறது, கடல்நீரை அமிலமயமாக்குகிறது. கடல் வாழ்வியலுக்கு துணைபுரியும் ஒட்சிசன் போதாமையால் "மரண வலயங்களும்" கடலில் உள்ளன. இவை அனைத்தும் மாசுபாட்டால் வழக்கமாகிவிட்டன.*

*கடலை பொறுத்தவரையில் மனித செயல்பாடுகளின் விளைவுகள் நம் அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது என்பதே வேதனையான உண்மை. குறிப்பாக நீங்கள் கடற்கரையிலிருந்து அப்பால் வாழ்ந்தால், கடலில் இருந்து விலகியிருப்பது போன்ற உணர்வு எளிதானது. ஏன் கடலை குப்பைகளை கொட்டும் இடமாக நடத்துகிறோம் என்பதை இது விளக்குகிறது. ஆனால், கடலை நாம் எவ்வாளவு அதிகமாக ஆராய்கிறோமோ, அந்தளவுக்கு அதிகமாக கடல் நமக்கு வழங்கும்.*

*கடற்பாசிகள் மற்றும் நுண்ணுயிரிகள் போன்ற ஆழ்கடல் வாழ்வின் மரபணுக் குளம், நோய் எதிர்ப்பின் அவசர சிக்கலைத் தீர்ப்பதற்கான திறவுகோலைக் கொண்டிருக்கக்கூடும். மிக முக்கியமாக, கிரகத்தில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் கடல் முக்கியமானது. நாம் சுவாசிக்கும் ஒட்சிசனில் பாதி, பிளாந்தன் மற்றும் கடற்பாசி போன்ற ஒளிச் சேர்க்கை கடல் தாவரங்களால் கிடைக்கிறது.*

*கடல் நமது காலநிலையை ஒழுங்குபடுத்துகிறது, கிரகத்தைச் சுற்றி சூரிய வெப்பத்தை விநியோகிப்பதன் மூலம் வெப்பநிலையை சமன் செய்கிறது. நாம் அதை உணராமல் இருக்கலாம். ஆனால், நமது நேர்த்தியான சமநிலையான புவியமைப்பில் கடல் வகிக்கும் பங்கினால் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் பாதிக்கப்படுகிறோம். ஆயினும்கூட, இந்த முக்கிய வாழ்க்கை ஆதாரத்தைப் பாதுகாக்க நாம் இதுவரை மேற்கொண்ட முயற்சிகள், கடலில் ஒரு துளியே.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

ஜூன் - 22 புதன்கிழமை
சுபகிருது வருடம் - ஆனி 08
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : நவமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்பாராத செலவு ஏற்படும் என்பதால் கவனமுடன் செயல்படுவது நல்லது. திடீர் பயணம் ஏற்படும். அலைச்சலும், செலவுகளும் அதிகரிக்கும். பணத்தைக் கையாளுவதில் கவனம் தேவை.

**இடபம்**
அலுவலகத்தில் நீங்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். நிதி நிலை சீராகும். தொழிலில் புதிய முயற்சி மேற்கொண்டு லாபம் காண்பீர்கள். தொழிலில் இருந்து வந்த தடை விலகும்.

**மிதுனம்**
வேலைக்காக முயற்சி மேற்கொண்டவர்களுக்கு எதிர்பார்த்த நல்ல தகவல் வரும். நண்பர்கள் உதவியுடன் புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். தொழிலில் முயற்சிக்கேற்ப வருமானம் உண்டாகும்.

**கடகம்**
இரண்டு நாட்களாக இருந்து வந்த நெருக்கடி விலகும். உங்களுடைய முயற்சி வெற்றியாகும். குழப்பங்கள் விலகும். திட்டமிட்டு செயல்படும் உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**சிம்மம்**
உங்கள் செயலில் இழுபறி உண்டாகும். மனம் ஒரு நிலையில் இல்லாமல் போகும். பகைவர்களின் கை மேலோங்கும். முயற்சியில் சிறு தடை உண்டாகும். பயணத்தில் எச்சரிக்கை தேவை.

**கன்னி**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சி கூடி வரும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். தம்பதியிடையே ஏற்பட்ட பிரச்னை அகலும். மகிழ்ச்சியான நாள். நண்பர் ஆதரவுடன் வெற்றி காண்பீர்கள். ஆதாயமான நாள்.

**துலாம்**
எதிர்ப்புகள் விலகும். உடல் நிலையில் உண்டான சங்கடம் நீங்கும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். வியாபாரத்தில் தடை அகற்றுவீர்கள்.

**விருட்சிகம்**
பிள்ளைகள் நிலையில் உயர்வு தோன்றும். வேலை குறித்த நல்ல தகவல் வரும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு குரு அருளால் வரன் வரக்கூடும். நீங்கள் எண்ணியதை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**தனுசு**
பெற்றோர் குறித்த கவலை வந்து போகும். மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள். உங்கள் செயலில் சிறு சிறு தடை ஏற்படும். சில நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.

**மகரம்**
வியாபாரத்தில் நூதனமாக செயல்பட்டு லாபம் காண்பீர்கள். தொழிலில் திட்டமிட்டு செயல்படுவதால் லாபம் உண்டாகும். உங்கள் எண்ணத்தை சகோதரர் உதவியுடன் நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பண நெருக்கடிகளை சரி செய்வீர்கள். குடும்பத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். தொழிலில் எதிர்பார்த்த வருமானம் வரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மீனம்**
எதிர்காலம் குறித்த சிந்தனையுடன் ஒரு செயலை தொடங்குவீர்கள். பணியில் கூடுதல் பொறுப்பு அதிகரிக்கும். வேலை பளுவால் சோர்வுடன் காணப்படுவீர்கள். கடுமையான பணிக்கிடையிலும் கலகலப்பு காணப்படும். ஊக்கத்துடன் காணப்படுவீர்கள்.

# பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் பழனிசாமி பக்கம் மாறுகின்றனர்!

சென்னை, ஜூன் 22

அ. தி. மு. கவில் ஒற்றைத் தலைமை விவகாரம் நாளுக்கு நாள் பூதாகரமாகியுள்ள நிலையில், ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் எடப்பாடி பழனிசாமி அணிக்கு மாறி வருகின்றனர்.

ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகளுக்கு மாற்றாக பொதுச் செயலாளர் பொறுப்பை மீண்டும் கொண்டு வர அ. தி. மு. கவின் முக்கிய தலைவர்கள் முயன்று வருகின்றனர்.

இந்தப் பதவிக்கு எடப்பாடி பழனிசாமி தரப்பும், ஓ. பன்னீர்செல்வம் தரப்பும் பல்வேறு கட்டங்களாக தனித்தனியாக ஆலோசனையில் ஈடுபட்டு வருகின்றனர். நாளை மறுதினம் அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் பொதுச்செயலாளரை தேர்வு செய்வது உள்ளிட்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் எனத் தெரிகிறது.

இதனால், பொதுக்குழு கூட்டத்துக்குகு முன்பாக எடப்பாடி பழனிசாமி தரப்பும், ஓ. பன்னீர்செல்வம் தரப்பும் தனது ஆதரவாளர்களுடன் தனித்தனியாக ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஓ. பன்னீர்செல்வத்திற்கு ஆதரவாக இருந்த நிர்வாகிகள் ஒவ்வொருவராக எடப்பாடி பழனிசாமி அணிக்கு மாறிவருகின்றனர்.

ஓ.பன்னீர் செல்வத்துக்கு ஆதரவாக 15 மாவட்ட செயலாளர்கள் உள்ளனர் என்று தெரிய வரும் நிலையில், தற்போது அது 10ஆகக் குறைந்துள்ளது. அடுத்தடுத்து அ. தி. மு. க நிர்வாகிகள் அணி மாறிவருவதால் பன்னீர்செல்வம் தரப்பினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (ஐ)

# இலங்கையிலிருந்து வந்த தமிழரை அகதிகளாக அறிவிக்க வேண்டும்!

## அன்புமணி ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, ஜூன் 22

“பொருளாதார நெருக்கடியால் தமிழகம் வந்த ஈழத் தமிழர்களை அகதிகளாக அறிவிக்க வேண்டும்” என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

அகதிகள் தினத்தன்று அவர் தனது ருவிட்டர் பதிவில், “உலக அகதிகள் நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது. நாடற்றவர்களாக மாறியவர்களின் நலன்களைக் காப்பதற்காகவும், அவர்களின் துணிச்சலைப் போற்றுவதற்காகவும்தான் இந்த நாள் கடைபிடிக்கப்படுகிறது. ஆனால், பொருளாதார நெருக்கடியால் தமிழகம் வந்த ஈழத்தமிழர்களின் நிலை?

இலங்கையில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த 3 மாதங்களில் 90 ஈழத்தமிழர்கள் தமிழகம் வந்துள்ளனர். ஆனால், அவர்கள் இதுவரை அகதிகளாக அறிவிக்கப்படவில்லை. சட்டவிரோதமாக குடியேறியவர்களாகக் கருதி அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து தமிழகம் வந்த ஈழத்தமிழர்களை அகதிகளாக அறிவிக்க வேண்டும் என்று தமிழக அரசு கடிதம் எழுதி இரு மாதங்களாகியும் அதன்மீது மத்திய அரசு இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. அதனால், ஈழத்தமிழர்களுக்கு உதவிகளை வழங்க முடியவில்லை.

இலங்கையிலிருந்து வந்த தமிழர்களின் துயரம் தீர்க்கப்படவேண்டும். அவர்களை அகதிகளாக அறிவித்து உதவிகளை வழங்க வேண்டும். ஏற்கெனவே தமிழகத்தில் உள்ள அகதிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்” என்றுள்ளது. (ஐ)

# சிகிச்சைமூலம் விஜயகாந்தின் கால் விரல் அகற்றப்பட்டது!

சென்னை, ஜூன் 22

நீரிழிவு பிரச்னையால் மருத்துவர்களின் ஆலோசனைப்படி தே. மு. தி. க. தலைவர் விஜயகாந்தின் வலது காலில் விரல் அகற்றப்பட்டது.

இதுகுறித்து அந்தக்கட்சி சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

நீண்ட ஆண்டுகளாக இருக்கும் நீரிழிவு பிரச்னையால் தே. மு. தி. க. தலைவர் விஜயகாந்தின் வலது காலில் உள்ள விரல் பகுதியில் ரத்த ஓட்டம் சீராக



இல்லாததால் மருத்துவர்களின் ஆலோசனைப்படி நேற்று விரல் அகற்றப்பட்டது.

மருத்துவர்கள் கண்காணிப்பில் தற்போது அவர் நலமுடன் இருக்கிறார். மேலும், மருத்துவர்களின் ஆலோனைப்படி தொடர்ந்து விஜயகாந்துக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிகிச்சை முடிந்து ஓரிரு நாட்களில் விஜயகாந்த் வீடு திரும்புவார். மேலும், அவரின் உடல்நிலை குறித்து சமூக வலைதளங்களில் பரவும் பொய்யான வதந்திகளை கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் யாரும் நம்ப வேண்டாம் - என்றுள்ளது. (ஐ)

# அ. தி. மு. க. பொதுக் கூட்டத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதா?

சென்னை, ஜூன் 22

அ. தி. மு. க. பொதுக் குழு கூட்டத்துக்கு பாதுகாப்புக் கோரிய வழக்கில், பொலிஸார் முடிவெடுக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எனினும், பொலிஸாரின் கேள்விகளுக்கு அ. தி. மு. க. கட்சியினர் கொடுக்கும் பதில்களைப் பொறுத்தே பாதுகாப்பு அளிக்கப்படும் பொலிஸார் தெரிவித்தனர்.

அ. தி. மு. க. பொதுக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு பொலிஸார் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கோரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போது, அ. தி. மு. க. வினருக்கு காவல் துறை தரப்பிலிருந்து 26 கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. அந்த கேள்விகளுக்கு அ. தி. மு. க தரப்பிலிருந்து எந்தவித பதிலும் அளிக்கவில்லை என வாதிடப்பட்டது.

இதனை ஏற்ற நீதிபதி, பொலிஸாரின் கேள்விகளுக்கு பதிலளிக்க உத்தரவிட்டார். இதன் பின்னரே பாதுகாப்பு அளிப்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், பாதுகாப்பு வழங்குவதாக முடிவு செய்யப்பட்டால், எந்தத் தரப்பு என்றெல்லாம் பார்க்கக்கூடாது எனவும், அனைத்து தரப்புக்கும் உரிய பாதுகாப்பு வழங்கி சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தி வழக்கை முடித்து வைத்தார். (ஐ)





## 8 ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வுகள் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் 65ஆவது சுதந்திர தின ஆசாதிகா அம்ரித் மகோத்சவ் கொண்டாட்டங்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 8ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

யாழ். இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம், யாழ் மாநகரசபை முதல்வர் வி. மணிவண்ணன், ஆணையாளர் ஆர்.ஜெயசீலன், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன், வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் யாழ்ப்பாண வலய கல்விப் பணிப்பாளர், மற்றும் யாழ்ப்பாண வலயத் திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மங்கள விளக்கேற்றலோடு ஆரம்பமாகிய 8 ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வின் ஆரம்பத்தில் யாழ். இந்திய துணைத்தூதுவரின் வர வேற்புரை இடம்பெற்றதோடுயோகா பயிற்சியும் இடம்பெற் றது.

நிகழ்வின் இறுதியில் யோகா பயிற்சியில் கலந்து கொண்டோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (அ)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடலட்டை உற்பத்தி கிராமங்கள்

## *அனுமதி வழங்கியது அமைச்சரவை*

**கொழும்பு, ஜூன் 22**

**வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆழமற்ற கடற்பகுதியில் கடலட்டை உற்பத்திக் கிராமங்களை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.**

ஏற்றுமதியை இலக்காக கொண்டு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு செலாவணி ஈட்டுவதை அதிகரித்தல் மற்றும் மீனவ சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு, வணிக ரீதியான கடலட்டை உயிரின வளர்ப்பு கருத்திட்டமொன்று இலங்கை தேசிய நீர் உயிரின அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த கருத்திட்டத்திற்காக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் 5,000 ஏக்கர் காணிகளை அடையாளம் கண்டு, அவற்றில் 100 ஏக்கர்களுடன் கூடிய கடலட்டை உற்பத்திக் கிராமங்களை உருவாக்குவதற்கு கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதிக்கு பதில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

கொழும்பு, ஜூன் 22

ருவண்டாவின் - கீகாலி நகரில் இடம்பெறும் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதிலாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

நேற்று முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை இந்த அமர்வு இடம்பெறவுள்ளது.

அந்த மாநாட்டில் 54 நாடுகள் பங்கேற்கவுள்ளன.

2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்த மாநாடு நடைபெறவிருந்தது.

எனினும், சர்வதேச ரீதியாக தாக்கத்தை செலுத்திய கோவிட்-19 பரவல் காரணமாக இரண்டு வருட காலமாக பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு பிற்போடப்பட்டிருந்தது. (அ)

# சுகாதார பணியாளர்களுக்கு வாராந்தம் எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 22

சுகாதார பணியாளர்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி முதல் வாராந்தம் சுகாதார பணியாளர்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அதற்கமைய வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில், தெரிவு செய்யப்பட்ட 44 எரிபொருள் நிலையங்களில் சுகாதார பணியாளர்களால் எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் கூறினார். (அ)

# அரச நிறுவனங்களில் கணினித் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது தொடர்பில் கோப் குழுவில் கவனம்

கொழும்பு, ஜூன் 22

இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் அரச வருமானத்தில் அதிக பங்களிப்பை வழங்கும் நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன் படுத்துவது தொடர்பில் கோப் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்க கணக்குகள் பற்றிய (கோப்) குழு பாராளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண தலைமையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, இலங்கை மதுவரித் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையம் ஆகிய நிறுவனங்களின் அதிகாரிகள் இந்தக் குழுக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனத்தினால் இந்த நிறுவனங்களுக்கு அவசியமான மென்பொருட்களை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் வழங்குதலுடன் தொடர்புபட்ட நிறுவனங்களை ஒன்றிணைக்கும் கணினி வேலைத்திட்டம் மற்றும் வருமான முகாமைத்துவ வலையமைப்பை உருவாக்கும் பணிகளில் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தின் ஈடுபாடு தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டது.

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் வழங்குதலுடன் தொடர்புபட்ட நிறுவங்களை ஒன்றிணைக்கும் கணினி வேலைத்திட்டம் 2015 இல் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை வெற்றிகரமற்ற நிலையில் காணப்படுகின்றமை தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த மென்பொருளைத் தயாரிப்பதில் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தின் செயற்பாடு தொடர்பில் திருப்தியடைய முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண சுட்டிக்காட்டினார்.

அரச நிறுவனங்களுக்கு கணினி வேலைத்திட்டங்களை உருவாக்குவது தொடர்பில் போதிய அறிவு இல்லை என்பதால் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தின் உதவியைக் கோரும்போது அது தொடர்பில் உரிய தலையீட்டை அல்லது உதவியை வழங்குவதற்கு இந்த நிறுவனம் நடவடிக்கை எடுப்பதில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மேலும், அரசு நிறுவனங்களை தகவல் தொழிநுட்பத்துடன் இணைத்து புதிய தொழில்நுட்பத்துடன் இணைக்கும் பொறுப்பு இந்த நிறுவனத்துக்கு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தொடர்புடைய வரி அறவிடும் அனைத்து அரச நிறுவனங்களையும் ஒன்றிணைக்கும் கணினி வலையமைப்பை சரியான முறையில் தயாரிக்க முடியாமை குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

அதற்கு மேலதிகமாக, இலங்கை மதுவரித் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையம் தயாரிக்கும் வேலைத்திட்டம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தினால் அரச நிறுவனங்களுக்கு தயாரிக்கப்பட்ட மென்பொருட்கள், ஆலோசனை வழங்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமை தொடர்பில் அறிக்கையொன்றை ஜூலை முதலாம் திகதிக்கு வழங்குமாறு கோபா குழு அந்த நிறுவனத்துக்கு பரிந்துரை வழங்கியது.

இந்தக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சுதர்ஷனி பெர்ணான்டோபுள்ளே, திஸ்ஸ அத்தநாயக்க, மொஹமட் முஸம்மில், துமிந்த திசாநாயக்க, நிரோஷன் பெரேரா, உபுல் கலப்பத்தி மற்றும் வீரசுமண வீரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.(அ)

# சர்வகட்சி அரசு அமைந்தால் மட்டுமே இலங்கையினால் மீண்டெழ முடியும்!

*சஜித், மைத்திரிபால சுட்டிக்காட்டு*



**கொழும்பு, ஜூன் 22**

**அனைத்து தரப்புகளாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வக்கட்சி அரசு அமைந்தால் மட்டுமே இலங்கையால் மீண்டெழ முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

ஜனாதிபதி கோட்டா, பிரதமர் ரணில் தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் கூறினார்.

அத்துடன், தேர்தலுக்கான கால எல்லை அறிவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதேவேளை, தற்போதைய அரசால் நாட்டு பிரச்னையை தீர்க்க முடியாது என சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். (அ)





## முல்லைத்தீவு உடையார்கட்டில் 7 பரல் மண்ணெண்ணெய் மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 22

போர் நடைபெற்ற காலப் பகுதியில் புதைக்கப்பட்ட 7 பரல்களில் 715 லீற்றர் மண்ணெண்ணெய் முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதியில் தனியார் காணி ஒன்றில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த காணியின் உரிமையாளரான கந்தசாமி என்பவர் கடந்த மே மாதம் 31ஆம் திகதி தனது காணியினை துப்பரவு செய்த போது, காணிக்குள் புதைக்கப்பட்டு இருந்த சில பரல்களை அடையாளம் கண்டு அது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் காணியில் அகழ்வு பணிகளை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

அதன் பிரகாரம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில், பொலிஸ் அதிகாரிகள், படை அதிகாரிகள், கிராமசேவையாளர் முன்னிலையில் அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது நிலத்தில புதைக்கப்பட்ட 7 பரல்கள் மீட்கப்பட்டுள்ளன. குறித்த 7 பரல்களில் இருந்தும் 715 லீற்றர் மண்ணெண்ணெய் காணப்பட்டது.

மீட்கப்பட்ட பொருட்கள் அனைத்தையும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் காணி உரிமையாளர் தெரிவிக்கையில்,

தோட்டம் செய்வதற்காக வீட்டு காணியின் பின்பக்கத்தில் கனரக இயந்திரம் கொண்டு துப்பரவு செய்து, பனை மரத்தை அகற்றும்போது நிலத்தில் பரல்கல் புதைக்கப்பட்டு இருந்தன.

இவற்றை யார் வைத்தார்கள் என்பது தொடர்பில் எங்களுக்குத் தெரியாது. போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது 2009 ஆம் ஆண்டு நாங்கள் இடம்பெயர்ந்து போய் விட்டோம். அதன் பின்னர் என்ன நடந்தது என்று எங்களுக்குத் தெரியாது. 2011 ஆம் ஆண்டு மீள்குடியேறினோம். எங்கள் காணியில் எதுவித பொருட்களும் இனம்காணப்படவில்லை. விவசாய நடவடிக்கைக்கு நிலத்தை பண்படுத்தும்போதே இவை தென்பட்டுள்ளன-என்றார். (ஆ)

## தொடரும் விலை உயர்வு காரணமாக கட்டட நிர்மாணத்துறை பின்னடைவு!

கொழும்பு, ஜூன். 22

இரும்பு, சிமெந்து உள்ளிட்ட கட்டட நிர்மாணப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக கட்டட நிர்மாணத் தொழிற்துறை பின்னடைவை சந்தித்துள்ளது.

இதனால் கட்டுமான தொழில்துறை பாதிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த தொழிலில் ஈடுபட்டுவருபவர்களது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கட்டுமாணத் தொழிற்துறை ஈடுபடுபவர்கள், தச்சு வேலை செய்பவர்கள், மின்னியல் வேலை செய்பவர்கள் உள்ளிட்ட கட்டுமாணத் தொழிற்துறையுடன் தொடர்புடைய இலட்சக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நெருக்கடியான சூழ்நிலையில், சிமெந்து, இரும்பு, கருங்கல், அலுமினியம் உள்ளிட்ட கட்டட நிர்மாண பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள்ளது.

இதனால், பாதிப்படைந்த மக்களுக்கு உதவும் வகையில் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என கட்டட நிர்மாணத் தொழிற்துறையினர் கோரியுள்ளனர். (அ)

### அதிக விலைக்கு எரிவாயு விற்பனை செய்தவர் கைது!

கொழும்பு, ஜூன் 22

ஹாலி எல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போஹாம லித்த பகுதிகளில் அதிக விலைக்கு எரிவாயு சிலிண் டர்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் நபரொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள், மற்றும் ஹாலி எல பொலிஸார் இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து 18 எரிவாயு சிலிண்டர்கள் கைபற்றியதாக ஹாலி எல பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை பதுளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை ஹாலி எல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## யாழில் காலில் முள் குத்திய இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 22

காலில் முள் குத்தியதாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தருமராசா மதிகரன் (வயது-28) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் காலில் முள் ஒன்று குத்தியதாகவும், அவ்விடத்தில் வலி ஏற்பட்டுள்ளதாகத் கூறி வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த நிலையில் விடுதியில் சேர்க்கப்பட்டு இளைஞருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அந்நிலையில் இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

## தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற பீடி இலைகள் பறிமுதல்

சென்னை, ஜூன் 22

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற ரூ.17 லட்சம் பீடி இலைகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு அண்மைக் காலமாக மஞ்சள், பீடி இலை, களைகொல்லி மருந்து உள்ளிட்ட பொருட்கள் கடத்தப்பட்டு வருகின்றன.

இதனை அவ்வப்போது கியூ பிரிவு பொலிஸார், கடலோர பாதுகாப்பு பொலிஸார் மடக்கிப் பிடித்து வருகின்றனர்.

அதேபோன்று போதைப் பொருட்கள் கடத்தலும் நடந்து வருகிறது. இதனால் மாவட்ட மரைன் பொலிஸார் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும் தொடர்ந்து கடத்தல் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இந்நிலையில் தூத்துக்குடி தருவைகுளம் அருகே உள்ள கடற்கரையில் இருந்து இலங்கைக்கு பீடி இலை கடத்தப்படுவதாக தூத்துக்குடி மாவட்ட கியூ பிரிவு பொலிஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில், இன்ஸ்பெக்டர் விஜய அனிதா தலைமையில் சப்-இன்ஸ்பெக்டர்கள் ஜீவமணி மற்றும் பொலிஸார் ரகசிய கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, பொலிஸாரை பார்த்ததும் கடற்கரையில் இருந்த ஒரு படகு வேகமாக கடலுக்குள் புறப்பட்டுச் சென்றது.

இதைத் தொடர்ந்து பொலிஸார் மீனவர்களின் உதவியுடன் மற்றொரு படகில், கடலுக்குள் சென்ற படகை விரட்டி சென்றனர். அப்போது அந்த படகில் இருந்தவர்கள், மறைத்து வைத்து இருந்த மூட்டைகளை தூக்கி கடலில் வீசினர். பின்னர் அங்கிருந்து வேகமாக தப்பிச் சென்று விட்டனர்.

பின்னர் கடலில் மிதந்து வந்த மூட்டைகளை பொலிஸார் சேகரித்தனர். மொத்தம் 38 மூட்டைகள் இருந்தன.

அந்த மூட்டைகளை பிரித்து பார்த்தபோது, ஒவ்வொரு மூட்டையிலும் சுமார் 45 கிலோ எடை கொண்ட பீடிஇலைகள் இருந்தன. மொத்தம் 1,700 கிலோ பீடி இலைகள் இருந்தன. இதன் இலங்கை மதிப்பு சுமார் ரூ.17 லட்சம் என்று கூறப்படுகிறது. (அ)

## சட்டவிரோத எரிபொருள் வர்த்தகம் மக்களே அவதானத்துடன் இருங்கள்!

கொழும்பு, ஜூன் 22

நாட்டில் எரிபொருள் நெருக்கடி நிலையை பயன்படுத்தி இடம்பெற்று வரும் சட்டவிரோத எரிபொருள் வர்த்தகம் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது.

லங்கா ஐ.ஓ.சியினால் 50க்கும் மேற்பட்ட பெற்றோல் மற்றும் டீசல் அடங்கிய கொள்கலன்கள் நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை 23 கொள்கலன்களில் பெற்றோல் மற்றும் டீசல் விநியோகிக்கப்பட்டதாக லங்கா ஐ.ஓ.சி தெரிவித்துள்ளது.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியாத தற்போதைய சூழ்நிலையில், மற்றுமொரு எரிபொருள் வர்த்தகம் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன.

தொலைபேசி அழைப்புக்கள் ஊடாக வீடுகளுக்கே எரிபொருளை கொண்டு வரக்கூடிய வகையிலான வர்த்தகம் ஒன்று இடம்பெறுவதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் யூ.எஸ்.எஸ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவ்வாறு வழங்கப்படும் எரிபொருட்களின் தரம் தொடர்பில் தற்போது பிரச்னை ஏற்பட்டுள்ளது.

எனவே அந்த சட்டவிரோத வர்த்தகம் தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (அ)

# சீனியின் விலை மேலும் உயரும்!

## சீனி இறக்குமதியாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 22
தாய்லாந்தில் இருந்து சீனி இறக்குமதி செய்ய நேரிட்டால் சந்தையில் சீனியின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என சீனி இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, சீனி கிலோ ஒன்றின் விலை 50 ரூபாவால் அதிகரிக்கக்கூடும் என இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீனி கிலோகிராம் ஒன்று தற்போது சந்தையில் 265 ரூபா முதல் 300 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இந்தியாவினால் சர்வதேச சந்தைக்கு சீனி உள்ளிட்ட மேலும் சில அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டமை காரணமாகவே சீனியின் விலை அதிகரித்துள்ளது.

உக்ரைன் உள்ளிட்ட மேலும் சில நெருக்கடிகள் காரணமாக இந்தியாவினால் சீனி, தானியங்கள் உள்ளிட்ட சில பொருட்களின் இறக்குமதி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், பங்களாதேஷ், மியன்மார், மாலைதீவு உள்ளிட்ட நாடுகள் ராஜதந்திர ரீதியாக மேற்கொண்ட தலையீடு காரணமாக இறக்குமதித் தடை நீக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, அரசாங்கம் ராஜதந்திர ரீதியாக தலையீடு செய்து சீனிக்கான இறக்குமதித் தடையை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என சீனி இறக்குமதியாளர்கள் கோரியுள்ளனர்.

அத்தகைய நடவடிக்கை எடுக்காவிடின் சந்தையில் சீனிக்கான விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# மண்ணெண்ணெய் இல்லாது வெங்காய செய்கை பாதிப்பு

## வடமராட்சி கிழக்கு விவசாயிகள் பாதிப்பு

**வடமராட்சி, ஜூன் 21**
**மண்ணெண்ணெய் இன்மையால் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சிறுபோக வெங்காயச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில் விவாசாயிகள் பலரும் திண்டாடுகின்றனர்.**

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் செம்பியன்பற்று, அம்பன், குடத்தனை ஆகிய கிராமங்களில் நெல் அறுவடைக்குப் பின்னர் பெருந்தொகையான நிலப்பரப்பில் புலோலி, கரவெட்டி, அல்வாய் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் சிறுபோக நெற்செய் கையை மேற்கொள்வது வழக்கம்.

இச் சிறுபோக வெங்காய செய்கையில் அதிக விளைச்சல் கிடைத்து விவசாயிகள் பெரிதும் நன்மை அடைந்து வந்துள்ளார்கள்.

இப் பிரதேசத்தில் சிறுபோக வெங்காயச் செய்கைக்காக விவசாயிகள் விளைநிலங்க ளைப் பண்படுத்தி வெங்காய நடுகையில் ஈடுபடுவதற்காக தயாராக இருந்து வருகின்ற போதிலும் நடுகை செய்யப்படும் வெங்காயப் பயிருக்கு தண்ணீர் இறைக்கப் போதிய மண்ணெண்ணையை எதிர் பார்த்து காத்திருக்கின்றனர். எனினும் இரண்டு மாதங்க ளுக்கு மேலாக இப்பிரதேசத்தில் மண்ணெண்ணெய் வரா மையினால் வெங்காயத்தை முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (அ-02)



# யாழ். மாநகர முதல்வருடன் கனேடியத் தூதுவர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாண மாநகரசபை முதல்வருக்கும் கனடிய தூதரகம் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும், மாநகர சபையின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பிலும் மாநகர சபையின் முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் ஆணையாளர் த.ஜெயசீலன் ஆகியோருடன் தூதுவர் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து நினைவுச் சின்னங்கள் வழங்கி பரிமாறப்பட்டன.

இது குறித்து மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவிக்கையில்-

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்னை, யாழ்ப்பாண மாநகரத்தின் வளர்ச்சித் திட்டங்கள், நாடு இவ்வாறான நிலைமைக்கு போனதற்கான காரணங்கள் தொடர்பில் கேட்டறிந்தார்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் நாட்டின் அபிவிருத்திக்கும் மாநகரத்தின் அபிவிருத்திக்கும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியது என்றும் அதனை மீளக் கட்டியெழுப்புவதற்கான விடயங்கள் தொடர்பிலும் தூதுவருக்கு தெரிவித்தேன் -என்றார். (அ)

# தனியார்துறை எரிபொருள் வழங்கலில் பெரும் சிக்கல்!

## கோண்டாவில் டிப்போவில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
தமது சேவையை தொடர எரிபொருள் வசதி ஏற்படுத்தித் தராவிட்டால், தனியார் பஸ்களுக்கு டீசல் வழங்க மாட்டோம் என வடபிராந்திய போக்குவரத்து சபை ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

இதனால், கோண்டாவில் இலங்கை போக்குவரத்துச் சபை தலைமைக் காரியாலயத்தின் முன்பாக பதற்றமான நிலைமை தோன்றியது.

தனியார் பஸ்கள், பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபை களஞ்சியங்களில் இருந்து எரிபொருளை வழங்கும் திட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி நேற்று கோண்டாவிலில் உள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபை தலைமைக் காரியாலயத்தில் எரிபொருளை பெற தனியார் வாகனங்கள் வரிசையில் காத்திருந்தன.

மதிய உணவின் பின்னர் எரிபொருள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இ.போ.ச ஊழியர்கள் பிரதான வாயிலை அடைத்து, தமது கோரிக்கை நிறைவேறினால் மட்டுமே எரிபொருளை வழங்குவோம் என அறிவித்தனர்.

தனியார் சேவை தொடர எரிபொருளை வழங்கும் அரசு, தமது சேவையை தொடரவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

# மெனிங் சந்தையில் துப்பாக்கிச் சூடு!

## ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 22
மெனிங் சந்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 42 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# பெற்றோல் ஏற்றிய கப்பல் 24 ஆம் திகதி நாட்டுக்கு!

கொழும்பு, ஜூன் 22
35,000 மெற்றிக் தொன் பெற்றோலை ஏற்றி வரும் கப்பல் ஜூன் 24ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித் துள்ளது.

மேலும், உலை எண்ணெய் ஏற்றி வரும் மற்றுமொரு கப்பல் எதிர்வரும் ஜூன் மாதம் 28ஆம்திகதி நாட்டை வந்தடைய உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ)

# ஓகஸ்ட், டிசெம்பரில் பாடசாலை விடுமுறைகள் குறைக்கப்படும்!

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 22
விடுபட்ட பாடத்திட்டத்தை ஈடுசெய்யும் வகையில் ஓகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதப் பாடசாலை விடுமுறைகள் குறைக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா தொற்றுநோய் காலத்தில் இருந்த நிலைமையில் இருந்து இன்றைய நிலைமை வேறுபட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆரம்ப தரங்களுக்கான ஆசிரியர்களுக்கு ஜூலை மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் மேலதிக அமர்வுகள் இருக்கும் என்றும் உயர்தர மாணவர்களுக்கு செப்ரெம்பர், ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மேலதிக நிகழ்ச்சிகள் உட்பட மீட்டல் வகுப்புகள் ஏற்பாடு செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

வார இறுதிக்குள் எரிபொருள் நெருக்கடி ஓரளவுக்குத் தீர்க்கப்படும் என கல்வி அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)



# எரிபொருள் வரிசையிலேயே பிறந்தநாள் கொண்டாட்டம்!

கொழும்பு, ஜூன் 22
எரிபொருளைப் பெறுவதற்காக இரண்டு நாட்கள் வரிசையில் நிற்கும் இளைஞன் ஒருவருக்கு நேற்று பிறந்தநாள். இதை அறிந்த வரிசையிலிருந்த ஏனையவர்கள் ஒன்றுதிரண்டு, வரிசையிலேயே அவரது பிறந்த நாளை கொண்டாடியுள்ளனர்.

பேராதனை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று இந்த சம்பவம் நடந்தது.

பேராதனை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரண்டு நாட்களாக எரிபொருளுக்காக காத்திருந்த இளைஞர் ஒருவருக்கு நேற்று பிறந்தநாள் என தெரிவிக்கப்பட்டதையடுத்து வரிசையில் நின்ற இளைஞர்கள் அருகில் உள்ள கடையில் இருந்து கேக்கை எடுத்து வந்து வெட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

பிறந்தநாள் கொண்டாடும் இளைஞன் நேற்றும் வீடு செல்லாமல் வரிசையில் இருந்தார். (அ)



# எவரெஸ்ட்டில் உருகும் பனிப்பாறைகள்:

## 400 மீட்டருக்கும் கீழாக முகாமை மாற்றும் நேபாளம்!!

நவீன் சிங் கட்கா

எவரெஸ்ட் சிகரத்தின் அடிவார முகாமை இடமாற்றம் செய்ய நேபாளம் தயாராகி வருகிறது. புவி வெப்பமயமாதல் மற்றும் மனித செயல்பாடுகள் ஆகியவற்றால் இந்த இடம் பாதுகாப்பற்றதாகி வருவதால் இந்த முடிவு மேற்கொள்ளப்படுகிறது.

வசந்த காலத்தில் எவரெஸ்ட் மலை ஏறக்கூடிய சுமார் 1,500 பேர் வரை பயன்படுத்தும் விதமான இந்த பேஸ் கேம்ப், வேகமாக உருகி வரும் கும்பு பனிமலைக்கு அருகில் அமைந்துள்ளது.

கடல் மட்டத்திலிருந்து தற்போது இருப்பதை விட குறைவான உயரத்தில் ஒரு புதிய மாற்று இடத்தில் இந்த “பேஸ் கேம்ப்“ அமைக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

உருகும் பனி நீரானது பனிமலையின் நிலைத்தன்மையை உருக்குலைக்கிறது என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள் என்றால், முகாம்களில் உறங்கிக் கொண்டிருக்கும்போதே விரிசல்கள் ஏற்படுகின்றன என்று மலையேற்ற வீரர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து நேபாள சுற்றுலாத் துறை இயக்குநரான ஹதாரநாத் அதிகாரிஹ பேசும்போது, “மாற்று இடத்துக்கு தயாராகிக் கொண்டிருக கிறோம். இது தொடர்பாக பங்குதாரர்கள் அனைவரிடமும் ஆலோசனைகளும் நடைபெற்று வருகின்றன” என்று தெரிவித்தார்.

“மாற்றங்களுக்கு ஏற்ப நம்மை தகவமைத்துக்கொள்ளும் விவகாரம் தான் இது. அதுபோக மலையேறும் வணிகத்தின் நிலைத்தன்மைக்கும் இது இன்றியமையாததாகி விட்டது.”

முகாம் தற்போது 5,364 மீட்டர் உயரத்தில் உள்ளது. புதிய முகாம் இதிலிருந்து 200 மீ முதல் 400 மீ வரையிலான தூரத்துக்கு குறைவான பகுதியில் இருக்கும் என்று அதிகாரி கூறினார்.

எவரெஸ்ட் பகுதியில் மலையேறுவதை எளிதாக்குவதற்கும் கண்காணிப்பதற்கும் நேபாள அரசாங்கம் அமைத்த குழுவின் பரிந்துரைகளை பின்பற்றி இந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இமயமலை பகுதியில் இருக்கும் ஏராளமான பனிமலைகளில் ஒன்றான கும்பு பனிமலை புவி வெப்பமயமாதல் காரணமாக வேகமாக உருகி வருகிறது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

2018 இல் லீட்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில், அடிவார முகாமுக்கு அருகில் உள்ள பனிமலைப்பகுதி ஆண்டுக்கு 1 மீ என்ற விகிதத்தில் உருகி வருவதாகத் தெரிய வந்தது.

பனிமலையின் பெரும்பகுதி பாறைக் குப்பைகளால் மூடப்பட்டுள்ளது. ஆனாலும் இதற்கிடையில் வெளியே தெரியும் பனிப்பகுதிகளும் உள்ளன. இந்த பனிப்பகுதிகள் உருகுவதால் பனிப்பாறை சீர்குலைகிறது என்று ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான ஸ்காட் வாட்சன் கூறினார்.

அப்படி பனிப்பகுதிகள் உருகும்போது, மேலே இருக்கும் பாறைக்கழிவுகளான சிறு சிறு பாறைகள் உருண்டு கீழே விழுவதன் மூலம் நீர்நிலைகளும் உருவாகின்றன.


பனிப்பாறைகளின் மேற்பரப்பில் அதிகரிக்கும் இது போன்ற பாறை விழும் நிகழ்வுகளும், அதிகரித்து வரும் உருகிய நீர் அளவும் பேராபத்தாகவே பார்க்கப்படுகிறது.

மேலும், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 9.5மில்லியன் கனமீட்டர் நீரை இந்த பனிப்பாறைகள் இழக்கின்றன என்றும் ஆய்வாளர் வாட்சன் தெரிவிக்கிறார்.

**உறங்கும்போது விரிசல்கள்:**

பேஸ் கேம்ப்புக்கு இடையே செல்லும் ஒரு நீர் பாதையானது மெல்ல, மெல்ல விரிவடைந்து கொண்டே வருகிறது என்று நேபாள அதிகாரிகளும் மலையேறிகளும் சொல்கின்றனர். அதுபோலவே மேற்பரப்பில் பிளவுகள் ஏற்படுவதும் கூட, முன்பை விட தற் போது அதிகமாக நடைபெறுகின்றன என்றும் தெரிவிக்கின்றனர்.

அந்த வரிசையில், “அதிர்ச்சியூட்டும் விதமாக, நாங்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போதெல்லாம் தரையில் விரிசல்கள் ஏற்படுவதைப் பார்க்கிறோம்” என்கிறார் அடிவார முகாமில் தங்கியிருந்த நேபாள ராணுவ அதிகாரியான கர்னல் கிஷோர் அதிகாரி.




**உருகும் பனி நீரானது பனிமலையின் நிலைத்தன்மையை உருக்குலைக்கிறது என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள் என்றால், முகாம்களில் உறங்கிக் கொண்டிருக்கும்போதே விரிசல்கள் ஏற்படுகின்றன என்று மலையேற்ற வீரர்கள் தெரிவிக்கின்றனர்.**

வசந்த காலத்தில் மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை நடைபெறும் தூய்மைப் பிரசாரத்துக்கு தலைமை தாங்கிய போது இவர் அடிவார முகாமில் தங்கியிருந்தார்.

“நிலத்தில் ஏற்படும் விரி சல்கள் வேகமாக பெரிதாகிக் கொண்டிருந்தன. நாங்கள் உள்ளே விழுந்திருக்கக்கூடும். இந்த உறைய வைக்கும் அனுபவம் எங்கள் பலருக்கும் மறுநாள் காலையில் கிடைத்தது” என்கிறார் சாகர்மாதா மாசுக்கட்டுப்பாட்டு வாரிய குழுவின் அடிவார முகாம் மேலாளர் ஷெரிங் என்சிங் ஷெர்பா.

பனிப்பாறைகள் நகர்கிற, விழுகிற பெரும் சப்தங் களும் கூட அடிக்கடி கேட்கின்றன. ஒரு சம தளமான இடம் உருவில் பெருத்து உயர்வதற்கு முன்பெல்லாம் இரண்டு முதல் மூன்று வாரங்கள் ஆகும். ஆனால், தற்போது ஒவ்வொரு வாரமும் நடக்கிறது.

அத்துடன் அதிகமான மக்கள் இங்கு இருப்பது கூட பிரச்னைக்கு கூடுதல் காரணமாக மாறுகிறது. குறிப் பாக பேஸ் கேம்ப்பில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 4,000 லிட்டர் சிறுநீர் கழிக்கப்படுகிறது.

மேலும், சமையலுக்காக பயன்படுத்தப்படும் மண்ணெண்ணெய், பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருட்களால் உருவாகும் வெப்பமும் பனிப்பாறை உருகுவதில் பங்கு வகிக்கிறது.

இந்த நிலையிலும், தற்போது இருக்கும் அடிவார முகாம் அடுத்த 3 முதல் 4 ஆண்டுகளுக் குப் பயன்படலாம் என்று தெரிவிக்கிறார் ஷெர்பா.

ஆனால், 2024ஆம் ஆண்டுக்குள் இந்த இடமாற்றம் நடந்தாக வேண்டும் என்று நேபாள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நாங்கள் அடிவார முகாமில் சூழலியல் மற்றும் தொழில்நுட்ப ரிதியீலான ஆய்வுகளை செய்தோம். ஆனால், இடமாற்றம் செய்யும் முன்பாக இங்கிருக்கும் உள்ளூர் மக்களிடன் கலாசாரத்தை கருத்தில் கொண்டு, அவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கிறார் நேபாள சுற்றுலா துறை இயக்குநர்.



## நெருக்கடியிலிருந்து வெளியே வருவதற்கான வழி?

# அனைத்துக் கட்சிகளின் மத்தியில் தாமதமின்றி கருத்தொருமைப்பாடு எட்டப்பட வேண்டும்!

**விக்டர் ஐவன்**

இலங்கை இந்தத் தருணத்தில் தற்போது இருக்கும் நிலையிலிருந்து மிகவும் பயங்கரமான படுகுழியில் விழுந்து விடும் விளிம்பில் உள்ளது. எனவே அது தற்போதைய பாதாளத்திலிருந்து மேலும் கீழிறங்குவதைத் தடுப்பதற்காக, பொருத்தமானதும் உடனடியானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், நாடு தவிர்க்க முடியாமல் புராதன கால நிலையிலிருந்து மீள்வது எளிதானது அல்ல. ஆனால், அரசியல் அமைப்பு மற்றும் தற்போதைய ஆட்சியில் மாற்றம் வேண்டும் என்று கோரும் மற்றும் வாதிடும் ஆக்ரோஷமான சக்திகளும் சமூகமும் இலங்கை எதிர்கொள்ளும் பயங்கரமான யதார்த்தத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை.



ஆளும் கட்சியை உடனடியாக மாற்ற முடியாது என்ற அசாதாரணமான அரசியல் சூழ்நிலை தற்போது நிலவி வருகிறது. ஊழல் மற்றும் முன்னேற்றமற்ற சக்தி என்று முத்திரை குத்தி அதை ஆதரிப்பதைத் தவிர்ப்பதற்கு இது சரியான நேரம் அல்ல. ஊழல் மற்றும் அற்புதமான பிம்பத்தைப் பொருட் படுத்தாமல் ஆளும் கட்சியுடன் கைகோர்ப்பது ஒரு சிறந்த தருணமாகப் பார்க்கப்படுகிறது.

நாடு இப்போது இருக்கும் படுகுழியிலிருந்து மீட்கப்பட வேண்டும். அதே சமயத்தில் அது அடுத்த அடுக்கில் விழுவதைத் தடுக்கிறது. விளைவுகள் மோசமாக இருக்கலாம். இச்சூழ்நிலையில், முறையான மாற்றம் மற்றும் ஆட்சி மாற்றம் போன்ற எதுவும், மேலே குறிப்பிட்டுள்ள அடிப்படை நோக்கத்தை சமரசம் செய்யாமல் இந்தக் குறிப்பிட்ட தருணத்தில் இலங்கை பொறுத்துக் கொள்ளக்கூடிய சட்டபூர்வமான அரசியலமைப்பு ரீ தியான கட்டமைப்புக்குள் இடம்பெற வேண்டும்.

'மறுசீரமைப்புக்கான மக்கள் இயக்கம்', நாம் தற்போது இருக்கும் நெருக்கடியின் குறிப்பிட்ட கட்டத்தை கருத்தில் கொண்டு தனது சீர்திருத்த திட்டத்தை வடிவமைத்துள்ளது. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்துக் கட்சிகளின் கீழ் கொண்டு வரப்படும் வகையில் இடைக்கால கட்டமைப்பானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டமைப்பானது, அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து சென்மதி நிலுவை நெருக்கடியைத் தீர்ப் பதற்கு செயற்பட முடிவதுடன் அதே சமயம் முறைமையில் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு மறுசீரமைப்புத்திட்டம் இரண்டு கட்டங்களில் செயல்படுத்தப்படலாம்.

முன்மொழியப்பட்ட சீர்திருத்தத் திட்டம், நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முன்கூட்டியே தேர்தலை நடத்துவது இன்றியமையாத நிபந்தனையாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு இரண்டு கட்டங்களாக அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் , நாட்டுக்குப் பொருத்தமான ஆட்சி முறையைத் தீர்மானித்த பின்னர், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்குத் தேவையான தேர்தல் சட்டங்களை இயற்றுவதும், பின்னர் பாராளுமன்றத்துக்கு மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடத்துவதும் திட்டத்தின் முதல் கட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய மிக முக்கியமான அம்சமாகும். அரசியலமைப்பு உருவாக்கக் குழுவுக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலாகவும் இது இருக்க வேண்டும்.

50 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 100 பொதுமக்கள் அடங்கிய அரசியலமைப்பு உருவாக்கக் குழு, முழு சீர்திருத்தத் திட்டத்தைத் திட்டமிடுதல், தேவையான வரைவுகளை உருவாக்குதல் மற்றும் முதல் கட்டத்தில் இறுதி வரை அறிமுகப்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் ஆகியவற்றுக்கான அதிகார சபையாகச் செயற்படும்.

இரண்டாவது கட்டத்துக்கான மறுசீரமைப்புத் திட்டத்தை திட்டமிடுதல் மற்றும் வரைவு செய்யும் பொறுப்பும் அதே குழுவிடம் ஒப்படைக்கப்படும். தேர்தலுக்குப் பிறகு ஆட்சிக்கு வரும் அரசாங்கமும் பாராளுமன்றமும் நிறைவேற்ற வேண்டிய கட்டாயமான சட்டப்பூர்வ கடப்பாடாக இது இயற்றப்படும்.

மறுசீரமைப்புத் திட்டத்தின் முதல் கட்டம் ஒரு வருடத்துக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மேலும் இரண்டாவது கட்டத்தில் அறிமுகப் படுத்தப்படும் ஏனைய சீர்திருத்தங்கள், 'பங்கேற்பு அரசியல மைப்பு உருவாக்கம்' உட்பட மூன்று ஆண்டுகளுக்குள் நிறைவு செய்யப் பட வேண்டும். ஆட்சிக்கு வரும் அரசாங்கம் எதுவாக இருந்தாலும் மறுசீரமைப்பு திட்டம் முடியும் வரை அனைத்துக் கட்சி அரசாங்கம் இருக்க வேண்டும்.

### யதார்த்த பூர்வமாக்குதல்

மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்மொழிவுகள் இலங்கைக்குத் தேவையான சீர்திருத்த வேலைத் திட்டத்தின் பரிமாணத்தை புரிந்து கொள்வதற்கான ஒரு மாதிரியாக மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளன. அதிலுள்ள பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவது அவசியம் என்பதை வலியுறுத்தும் நோக்கில் அல்ல. இது மக்கள் பங்கேற்பின் சீர்திருத்தத் திட்டமாகும். எனவே, முன்மொழிவுகளை முன்வைக்க மக்களுக்கு உரிமை உள்ளது. முழுத் திட்டமும் வெளிப் படைத் தன்மையுடனும், பொதுமக்கள் தீவிரமாக ஈடுபடும் வகையிலும் செயற் படுத்தப்படும்.

இந்த வேலைத்திட்டம் (அ) இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடியைத் தீர்க்க அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான உறுதியான அடித்தளத்தை வழங்குகிறது. (ஆ) இந்தச் சீர்திருத்தத் திட்டம் இந்த நேரத்தில் சர்வதேச உதவியைப் பெறுவதற்கான உறுதியான அடித் தளத்தை இலங்கைக்கு வழங்குகிறது. (இ) தீங்கான மற்றும் குழப்பமான முறைமையில் ஆழமான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு வலுவான அரசியலமைப்பு கட்டமைப்பையும் இது வழங்குகிறது. (ஈ) கறுப்புப் பணம் இல்லாமல் போட்டியிடக்கூடிய முன்கூட்டியே தேர்தலை நடத்து வதற்கான இடத்தை இது வழங்கும் (இ) பிளவுபட்ட தேசத்தை ஒருங்கிணைத்து சமத்துவக் கொள்கையின் அடிப்படையில் நவீன தேசத்தைக் கட்டியெழுப்பு வதற்கான உறுதியான அடித்தளத்தை இது வழங்குகிறது. (உ ) சட்டத்தின் ஆட்சியின் அடிப்படையில் ஒரு புதிய ஆட்சி முறையையும், பொதுமக்கள் பங்கேற்பின் அடிப்படையில் ஒரு நவீன அரசியலமைப்பையும் உருவாக்க இது வாய்ப்பளிக்கும்.

உத்தேச மறுசீரமைப்பு வேலைத் திட்டத்துக்கு முதலில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவும் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒப்புதல் அளித்தனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வுடன் ஜூன் 10ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில், அவர் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது மட்டுமன்றி, ஜூன் 13ஆம் திகதி அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த விரிவான கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்தார்.

ஜூன் 13 கூட்டத்தில் ஐக்கியமக்கள் சக்தியின் உத்தியோகபூர்வ படிநிலையை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவும், எதிர்க்கட்சி கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் கலந்து கொண்டனர்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித் துவப் படுத்திய எதிர்க்கட்சிகளில் சம்பிக்க ரணவக்க மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் மாத்திரமே பிரசன்னமாகி யிருக்கவில்லை. சுமார் நான்கு மணி நேரம் நீடித்த இந்த விவாதம் உற்சாகமாக நடந்தது. சீர்திருத்தத் திட்டம் மற்றும் அத்தகைய திட்டத்தைக் கொண்டிருப்பதன் அவசியத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். கால தாமதமின்றி அனைத்துக் கட்சி ஆட்சி அமைக்கப்பட வேண்டி யதன் அவசியம் குறித்து பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

அரசியலமைப்பில் ஆழமானதும் சாதகமா னதுமான மாற்றத்தைக் கொண்டு வரும் விரிவான கட்டமைப்பு மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்காக நாட்டை வழிநடத்துவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதை நோக்கி இலங்கை நகர்வதாகத் தெரிகிறது. இது ஒரு மிக முக்கியமான போக்கு என்று சொல்லத் தேவையில்லை. ஜே.வி.பி., 43 ஆவது படையணி (பிரிகேட்), சி. ல.சு.க மற்றும் ஆளும் கட்சியை பிரதிநிதித் துவப்படுத்தும் பல்வேறு குழுக்களுடன் இது பற்றி கலந்துரையாடுவதற்கு நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். காலதாமதமின்றி அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த கருத்து எட்டப்பட வேண்டும்.


இந்த நெருக்கடிக்கு முகங்கொடுத்து நாட்டின் மூன்று முக்கிய தூண்களாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் உருவாக்கப்பட வேண்டும் என்பது எனது கருத்து.அரசின் தலைவரான ஜனாதிபதியே அரசின் அனைத்து விவகாரங்களையும் கண்காணிக்கும் அதிகாரம் படைத்தவராக இருக்க வேண்டும். சென்மதி நிலுவை நெருக்கடி மற்றும் அரசாங்கத்தின் விவகாரங்களை மேற்பார்வையிடும் அதிகாரியாக பிரதமர் இருக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் மறுசீரமைப்பு த் திட்டத்தைக் மேற்பார்வை செய்யும் அதிகாரம் கொண்டவராக இருக்க வேண்டும்.

இத்தகைய கலவையானது நாட்டை ஐக்கியப்படுத்த உதவுவது மட்டுமல்லாமல், நாடு அதன் தற்போதைய படுகுழியிலிருந்து வெளிப்படுவதற்கு ஓர் உறுதியான அடித்தளத்தை வழங்கும். இது மோசமான சூழ்நிலையாக இருக்கக்கூடிய அடுத்த கட்டத்துக்கு விழுவதைத் தடுக்கும். இறுதியில், இளைய தலைமுறையினரின் கோரிக்கைகள் கடுமையான வழிமுறைகளில் அல்லாமல் , சுமுகமான அரசியலமைப்பு ரீதியான கட்டமைப்பின் மூலம் நாடு வென்றெடுக்கக் கூடிய ஒன்றாக மாறும்.

**(பினான்சியல் டைம்ஸ்)**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

18) 
i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................
ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

.............................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, .............., ............ ii) 18, 15, 12, .............., ............

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

...................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8 **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130 2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745 **23.** 455
**24.** 1l 100ml / 1100ml **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30 **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1 **31.** 2 **32.** 3
**33.** 2 **34.** 3 **35.** 2

---

**கல்வி tv CHANNEL-1**

**15.06.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

**கல்வி tv CHANNEL - 2**

**15.06.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சாய்ந்தமருதில் எரிபொருள் வழங்குவதில் முறைகேடு!

## தீர்வு கோரி பிரதேச செயலாளரிடம் சென்ற மக்கள்

அம்பாறை, ஜூன். 22

சாய்ந்தமருது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முறைகேடாக எரிபொருள் விநியோகம் நடைபெறுவதாகவும் இவ்விடயங்களில் பிரதேச செயலகம் பாராமுகமாக இருப்பதாகவும் தெரிவித்து சாய்ந்தமருது இளைஞர்கள் தலைமையிலான எரிபொருளுக்கு காத்திருந்தோர்கள் நேற்றுக் காலை சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக்கை அலுவலகத்தில் சந்தித்து எரிபொருள் பிரச்னைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இரவு நேரங்களில் முறைகேடாக எரிபொருள் வழங்கப்படுவதாகவும், பாதுகாப்புக்கு நிற்கும் பாதுகாப்புப் படையினர் இந்த செயலுக்கு துணை போவதாகவும் தெரிவித்த பொதுமக்கள், எரிபொருள் வழங்குவதற்கு ஒரு முறையான பொறிமுறையை உருவாக்குமாறும் தொண்டரணியாக இந்த விடயத்தை கையாள முடியுமான உதவிகளை வழங்க தயாராக இருப்பதாகவும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை எரிபொருள் கேட்டும் எரிபொருள் வழங்கப்படாமையினால் நீர் விநியோகம் தடைப்பட்டிருந்ததாகவும் பிரதேச செயலாளருக்கு தெரிவித்தனர்.

இது தொடர்பில் கலந்துரையாடிய சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் முறையான தீர்வொன்றை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும், முறைகேடுகள் இடம்பெறுவதை ஆதாரத்துடன் சமர்ப்பிக்குமாறும் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

ஏற்கனவே திட்டமிட்டு இன்று இடம்பெற உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள், அரச உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலில் இந்த பிரச்னைக்கான தீர்வைப் பெற தான் முயற்சிப்பதாகவும் இதன்போது அவர் தெரிவித்தார்.

சாய்ந்தமருது எரிபொருள் நிலைய முன்றலில் இருந்து வாகனங்களை அங்கு நிறுத்திவிட்டு நடைபவனியாக பிரதேச செயலகத்தை வந்தடைந்த பொதுமக்கள் சார்பில் சமூக செயற்பாட்டாளர்களான சக்கி செயின், எம்.எம். ஹில்மி, முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எம்.எம். தில்சாத், எப்.எம். டில்ஷாத் உட்பட பலரும் கலந்து கொண்டு இந்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். (அ)

# வவுணதீவு பொலிஸ் மீது தாக்குதல் 6 பெண்கள் உட்பட 12 பேர் மறியலில்

மட்டக்களப்பு, ஜூன். 22

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள ஊத்துமடு - பாவக்கொடிசேனைப் பிரதேசத்தில் கசிப்பு விற்பனை செய்துவரும் வீடு ஒன்றை முற்றுகையிட்டு கசிப்பு வியாபாரியை கசிப்புடன் கைது செய்ய முற்பட்டபோது அங்கிருந்த குழு ஒன்று பொலிஸார் மீது மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸார் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அதேவேளை, பொலிஸ் வாகனத்தை உடைத்துச் சேதப்படுத்திய சம்பவம் தொடர்பாக 6 பெண்கள் உட்பட 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.நிசந்த அப்புகாமி தெரிவித்துள்ளார்.

வவுணதீவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்று முன்தினம் வீடு ஒன்றை முற்றுகையிட்டு அங்கு கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞர் ஒருவரை 2 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் கைதுசெய்தனர்.

கைதான இளைஞரை ஜீப் வாகனத்தில் ஏற்றுவதற்குப் பொலிஸார் முற்பட்டபோது குறித்த இளைஞரின் சகோதரி உள்ளிட்ட உறவினர்கள் அவரை ஜீப் வாகனத்தில் ஏற்றவிடாது தடுத்தனர்.

இதையடுத்துப் பொலிஸாருக்கும் அவர்களுக்கும் இடையே இழுபறி இடம்பெறுக் கொண்டிருந்தபோது குறித்த இளைஞர் அங்கிருந்து தப்பி ஓட முயற்சித்த நிலையில் அவரைப் பொலிஸார் சுற்றி வளைத்து மீண்டும் பிடித்தனர்.

கைதான இளைஞர் ஜீப் வாகனத்தில் ஏற்றப்பட்டதையடுத்து பொலிஸார் மீது இளைஞரின் உறவினர்கள் தாக்குதல் மேற்கொண்டதில் பொலிஸார் ஒருவர் காயமடைந்ததுடன் ஜீப் வாகனத்தின் கண்ணாடிகளும் உடைந்து சேதமடைந்தன.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதே சமயம் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தவர்களை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது அவர்களை, 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)



# ஓட்டமாவடி பகுதிக்கு வாழ்வாதார உதவிகள்

மட்டக்களப்பு, ஜூன். 22

சுற்றாடல் அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நஸீர் அஹமட்டின் நிதியொதுக்கீட்டில் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், அதிதிகளாக அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ஏ.ஏ. நாஸர், ஏறாவூர் நகர சபை முன்னாள் தவிசாளர் எம்.ஐ. தஸ்லிம், அமைச்சரின் ஓட்டமாவடி பிரதேச இணைப்பாளர் எம்.காஸிம் மௌலவி, வாழைச்சேனைப் பிரதேச இணைப்பாளர் முஹம்மது ஜவாத் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 8 கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 30 இலட்சம் நிதியொதுக்கீட்டில் காலாண்டுக்குரிய வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

நாடு எதிர் நோக்கியுள்ள இறுக்கமான பொருளாதார சூழலில் குறித்த உதவிகளை வழங்க நிதியொதுக்கீடு செய்த அமைச்சருக்கு பயனாளிகள் நன்றி தெரிவித்தனர். (அ)

# குடும்ப தகராறில் ஒருவர் உயிரிழப்பு

திருமலை, ஜூன். 22

திருகோணமலை - புல்மோட்டை பிரதேசத்தில் குடும்பத் தகராறு காரணமாக ஏற்பட்ட கைகலப்பில் நபரொருவர் உயிரிழந்த சம்பம் நேற்று இடம்பெற்றுள்ளது.

புல்மோட்டை - அரபாத் நகர் பகுதியைச் சேர்ந்த ஏ.ஜீ. சதாம் (வயது-28) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குடும்பத்தகராறு காரணமாக மனைவியின் சகோதரர் குறித்த நபரை தாக்கியுள்ளார். இதனால் படு ஸ்ரீகாயமடைந்த அவர் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை புல்மோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கல்முனை மாநகர சபைக்கு எதிராக நீதிமன்றை நாட தயாராக உள்ளோம்

## கல்முனை பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர்

அம்பாறை, ஜூன். 22

மக்களுக்கு சேவை செய்ய விரும்புவதானால் கல்முனை மாநகர சபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யாமல், சட்ட நடவடிக்கைகள் எடுக்காமல் புரிந்துணர்வுடன் பணியாற்ற தயாராக இருக்கின்றோம். ஆனால் அவர்களின் பாராமுகம் தொடர்ந்து சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு தேவை ஏற்பட்டால் அதையும் செய்யத் தயாராக இருக்கின்றோம். மக்களின் சுகாதாரம் மீது எப்போதும் கரிசனை செலுத்த வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச சுகாதார நிலைகள் தொடர்பில் ஆராயும் உயர்மட்ட கலந்துரையாடல் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் யூ. எல். எம். நியாஸ் தலைமையில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நேற்று பகல் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம். றிபாஸ், திட்டமிடல் வைத்திய அதிகாரி எம்.சி.எம். மாஹிர், பிராந்திய தொற்றா நோய் தடுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் ஏ.எல்.எம்.பஸால் , கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எம். ஜே. கே.எம். அர்சத் காரியப்பர், சாய்ந்தமருது உலமா சபை தலைவர் மௌலவி எம். எம். சலீம், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக அலுவலர் எம். நழீர், மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம். பைசால், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது திண்மக்கழிவகற்றல் தொடர்பிலும், வடிகான்களின் முறையற்ற பராமரிப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன் கல்முனை மாநகர சபையின் பொறுப்பற்ற தன்மையினாலும், அசமந்த போக்கினாலும் மாநகர மக்கள் எதிர்நோக்கும் நோய் நிலைகள், தொற்றா நோய் ஆபத்துக்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு அது தொடர்பில். நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராயப்பட்டது.

எல்லா திணைக்களங்களுடனும் புரிந்துணர்வுடனும், நட்புடனும் ஒன்றிணைந்து செயற்பட்டு மக்களுக்கு சேவை செய்ய விரும்புவதானால் கல்முனை மாநகர சபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யாமல், சட்ட நடவடிக்கைகள் எடுக்காமல் புரிந்துணர்வுடன் பணியாற்ற தயாராக இருக்கின்றோம். ஆனால் அவர்களின் பாராமுகம் தொடர்ந்து சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு தேவை ஏற்பட்டால் அதையும் செய்யத் தயாராக இருக்கின்றோம். மக்களின் சுகாதாரம் மீது எப்போதும் கரிசனை செலுத்த வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் முறையற்ற விதத்தில் அகற்றப்படும் திண்மக்கழிவுகள் மற்றும் வாடிகான்களில் நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டமை, வடிகான்கள் துப்பரவு செய்யப்படாமை உட்பட பல்வேறு சுகாதார பிரச்னைகளை ஆதாரங்களுடன் முன்வைத்து சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் யூ. எல்.எம். நியாஸ் உடனடித் தீர்வை பெறுவது தொடர்பில் கவனம் செலுத்த சபைக்கு கோரிக்கை முன்வைத்தார்.

கல்முனை மாநகர சபை முதல்வர், ஆணையாளர் ஆகியோர் உரிய வசதிகளை ஏற்படுத்தி தந்தால் இந்த பிரச்சினைகளை தீர்க்க தயாராக இருக்கிறோம். மாநகர ஊழியர்கள் வேறு பணிக்கு அமர்த்தப்படுவதனாலும் வாகன வசதிகளில் உள்ள முரண்பாடுகள் காரணமாக மாநகர சபை வேலைகளை சீராக செய்ய முடியாதுள்ளது. மாநகர சபையில் நிர்வாக பிரச்னைகள் மலிந்து காணப்படுவதனால் மக்களின் பிரச்னைகளை தீர்க்க முடியாத நிலை உள்ளது. வடிகான் என்னுடைய கட்டுப்பாட்டில் இல்லை. அது ஆணையாளர், பிரதி ஆணையாளரின் பொறுப்பில் உள்ளதாக அறிகிறேன். அவர்களிடம் இது தொடர்பில் அறிவிக்கவேண்டும் என்று கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டும் கல்முனை மாநகர சபை முதல்வர், ஆணையாளர் அல்லது அவர்களின் சார்பில் யாரும் கலந்து கொள்ளவில்லை என்பதுடன் கடந்த கூட்டத்திலும் ஆணையாளர் இடையிலேயே எவ்வித அறிவிப்புமின்றி எழுந்து சென்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இஸ்ரேல் பாராளுமன்று கலைக்கப்படுகின்றது!

## 3 வருடங்களில் 5 ஆவது தேர்தல் விரைவில்

ஜெருசலேம், ஜூன். 22

இஸ்ரேல் பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்பட்டு புதிய தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளதாக பிரதமர் நப்தலி பென்னட் அறிவித்துள்ளார்.

நப்தலி பென்னட் தலைமையிலான கூட்டணி சிறு பான்மை அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான் மையை இழந்ததை அடுத்து பாராளுமன்றத்தை கலைத்து மீண்டும் தேர்தலுக்குச் செல்லும் அறிவிப்பை பிரதமர் நப்தலி பென்னட் நேற்று முன் தினம் திங்கட் கிழமை வெளியிட்டார்.

இதன்மூலம் 3 ஆண்டுகளில் 5 ஆவது பொதுத் தேர்தலை இஸ்ரேல் விரைவில் எதிகொள்ள உள்ளது.

புதிய தேர்தல் குறித்த அறிவிப்பு முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு வழிவகுக்கலாம் அல்லது நீடித்த அரசியல் குழப்பத்தின் மற்றொரு காலகட்டத்திற்கு களம் அமைக்கலாம் என இஸ்ரேல் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காற்று திசை மாறிவிட்டது என்று நான் நினைக் கிறேன். அதனை என்னால் உணர முடிகிறது என தேர் தல் அறிவிப்பு குறித்து முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கருத்து வெளியிட்டுள்ளார்.

எனினும் மீண்டும் பெஞ்சமின் நெதன்யாகுவை அவரது லிகுட் கட்சி பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தினாலும் அவரால் பெரும்பான்மை பெற முடியுமா? என்பதும் கேள்விக்குறியாகவே இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

நெதன்யாகுவின் முன்னாள் கூட்டாளியும் உதவி யாளருமான பிரதமர் நப்தலி பென்னட் ஒரு வருடத் திற்கு முன்பு தனது அரசாங்கத்தை அமைத்தார். ஆனால் பலவீனமான கூட்டணி அரசாங்கம், இந்த ஆண்டின் தொடக்கத்தில் பெரும்பான்மையை இழந்தது.

இந்நிலையிலேயே நேற்று முன் தினம் அரசாங்கத்தை கலைக்கும் திட்டத்தை அறிவித்த பிரதமர் நப்தலி பென்னட், கடினமான சூழ்நிலையில் தான் சரியான முடிவை எடுத்துள்ளதாகக் கூறினார்.

நாங்கள் ஒன்றாக இணைந்து இஸ்ரேலை குழியிலி ருந்து மீட்டோம். இந்த வருடத்தில் பல விடயங்களை சாதித்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கூட்டணி ஒப்பந்தத்தின் கீழ், இஸ்ரே லின் பெரிய மத்தியவாதக் கட்சியான யெஷ் அடிட் கட்சித் தலைவராக இருக்கும் யேர் லேபிட் இடைக்கா லப் பிரதமராக பதவியேற்கவுள்ளார். அவர் நெதன்யாகு வுக்கு முக்கிய போட்டியாளராக இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)



# பாராளுமன்றம்செல்கிறார் சுத்திகரிப்புப் பணிப் பெண்

பாரிஸ், ஜூன். 22

இம்முறை பிரான்ஸின் நாடாளுமன்றத்துக்குத் தெரி வானோரில் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைந் துள்ளபோதிலும் அவர்களில் மிக முக்கியமானவர் ரஷெல் கேக் என்ற 48 வயதான ஆபிரிக்க வம்சாவளிப் பெண்.

பாரிஸ் நகரின் பற்றிக்நொலெஸ் பகுதியில் உள்ள பிரபல இபிஸ் ஹொட்டலில் அறைகளைத் துப்புரவு செய்யும் ஊழியர். நாளாந்தம் நாற்பது என்ற கணக்கில் அறைகளைத் தூய்மைப்படுத்தும் பணியியில் மிக நீண்ட காலம் ஈடுபட்டுவந்த அவர், அதே பணியில் ஈடுபடுகின்ற நூற்றுக்கணக் கான பெண் தொழிலாளர் களது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துப் போராடி யவர்.

ஹொட்டேல் பணிப் பெண்களின் சிறந்த ஊதியம், பாதுகாப்பான பணிச் சூழல் என்பவற்றுக்காக ஹொட் டேல் நிர்வாகத்துக்கு எதிராக 22 மாதங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வெற்றி கண்ட வர். பணிப் பெண்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தொழிற் சங்கவாதியாகச் செயற்பட்ட அவர், மக்ரோன் அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்து வந்த மஞ்சள் மேலங்கி இயக்கத்தின் ஆதரவாளராகவும் விளங்கினார்.

இந்த முறை தேர்தலில் ஜோன் லூக் மெலன்சோன் தலைமையிலான நியூப்ஸ் என்ற இடது சாரிகள் கூட்டணியில் பாரிஸின் புறநகரான வல் டீ மார்ன் ஏழாவது தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட ரஷெல் கேக், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சரைத் தோற்கடித்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்ட்டில் பிறந்தவர் ரஷெல். தனது 26 ஆவது வயதில் 2000 ஆம் ஆண்டில் அங்கிருந்து பிரான்ஸுக்குப் புலம்பெயர்ந்தவர்.

ஐந்து குழந்தைகளின் தாயாகிய அவர் 2015 இல்தான் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்றார். (அ)

# லெபனானில் முதல் குரங்கம்மை பாதிப்பு உறுதி உலகெங்கும் 2,100இற்கு மேற்பட்டோருக்கு தொற்று

பெய்ரூட், ஜூன். 22

லெபனான் குரங்கம்மை தொற்று நோயால் பாதிக் கப்பட்ட முதல் நபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அடையாளம் காணப்பட்டதாக அந்நாட்டு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட நோயாளி வெளிநாட் டில் இருந்து வந்தவர். அவர் தற்போது வீட்டில் தனி மைப்படுத்தப்பட்டுள்ளார். அத்துடன், அவரது நெருங் கிய தொடர்புகளைக் கண்டறிந்து தனிமைப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுவாக கடந்த காலங்களில் குரங்கம்மை நோய் பாதிப்பு மேற்கு, மத்திய ஆப்பிரிக்காவில் மட்டுமே கண்டறியப்பட்டது.

ஆனால் கடந்த சில மாதங்களாக அவை ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய பகுதிகளிலும் உறுதி செய்யப் பட்டுள்ளன.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து 42 நாடுகளில் 2,100இற்கும் மேற்பட்ட குரங்கம்மையால் பாதிக்கப் பட்ட நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர்.

எனினும் குரங்கம்மை தொற்றால் பாதிக்கப்பட் டோர் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கக்கூடும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே குரங்கம்மை தொடர்பில் உச்ச விழிப்பு நிலையை அறிவிக்க வேண்டுமா? என்பது குறித்து ஜூன் 23ஆம் திகதி முடிவு எடுக்கப்படும் என வும் உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

# ரஷ்ய புத்தகங்களுக்கு உக்ரைன் அரசு தடை!



கீவ், ஜூன். 22

உக்ரைன் நாட்டின் பொது இடங்களில் ரஷ்ய இசைக்குத் தடை விதித்து உக்ரைன் பாராளுமன்றத்தில் தீர் மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டுக்கு பிறகு ரஷிய இசைக் கலைஞர்களால் பாடப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட இசையை உக்ரைன் பொது வெளிகளில் இசைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேட்டோ படைகளில் இணைந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து உக்ரைன் நாட்டின் மீது ரஷ்ய இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்ய இராணு வத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில் உக்ரைன் வீரர்களும் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

நான்கு மாதங்களுக்கும் மேலாக இரு நாடுகளுக்கும் இடையே போர் தொடர்ந்து வருகிறது. இந்நிலையில், ரஷ்யாவின் இசையை உக்ரைனின் பொது இடங்களில் இசைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உக்ரைன் பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி நிபந்தனைகளுடன், 1991ஆம் ஆண்டுக்கு பிறகு ரஷ்ய இசைக்கலைஞர்களால் உருவாக்கப்பட்ட அல்லது பாடப்பட்ட பாடல்களை ஒலிபரப்புவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஊடகங்களில் ஒலிபரப்பு வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், ரஷ்யா, பெலாரஸ் ஆகிய நாடுகளின் புத்தகங்களை இறக்குமதி செய்வதற்கும் உக்ரைன் பாராளுமன்றத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

# புகழ்பெற்ற 'ஜம்போ' மிதக்கும் உணவகம் கடலில் மூழ்கியது!

பீஜிங், ஜூன். 22

உலக புகழ்பெற்ற ஹொங்கொங் சுற்றுலாத்தலமாக விளங்கிய 'ஜம்போ' மிதக்கும் உணவகம், தென் சீனக் கடலில் மூழ்கியதாக அதன் தாய் நிறுவனம் தெரிவித் துள்ளது.

பாராசெல் தீவுகளுக்கு அருகில் 'ஜம்போ' மிதக்கும் உணவகம், ஞாயிற்றுக்கிழமை பாதகமான நிலைமை களை எதிர்கொண்ட பிறகு மூழ்கியதாக அபெர்டீன் ரெஸ்டாரன்ட் எண்டர்பிரைசஸ் ஒரு அறிக்கையில் அறிவித்தது.

படகு 1,000 மீற்றருக்கும் (3,280 அடி) அடியில் மூழ்கியதால் மீட்புப் பணி மிகவும் கடினமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அபெர்டீன் ரெஸ்டாரன்ட் எண்டர்பிரைசஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்த விபத்தால் மிகவும் வருத்தமடைந்துள்ளோம். மேலும் விபரங்களை சேகரிக்கும் முயற்சி செய்கின்றோம். பணி யாளர்கள் யாரும் காயமடையவில்லை' என தெரிவித் துள்ளது.

ஹொங்கொங்கின் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட வரலாற்று சின்னங்களில் ஒன்றான 'ஜம்போ' மிதக்கும் உணவகம், மூழ்கியதையடுத்து இதன் வாடிக்கையா ளர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பிரியாவிடை செய்திகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

பயணத்திற்கு முன், மிதக்கும் உணவகத்தை ஆய்வு செய்யவும், கப்பலில் ஹோர்டிங்குகளை நிறுவவும் கடல் பொறியியலாளர்கள் பணியமர்த்தப்பட்டதா கவும், சம்பந்தப்பட்ட அனைத்து ஒப்புதல்களும் பெறப் பட்டுள்ளதாகவும் நிறுவனம் கூறியுள்ளது.

கிட்டத்தட்ட ஒரு தசாப்த கால நிதிச் சிக்கல்களுக் குப் பிறகு, கொவிட்-19 தொற்றுநோயால் கடந்த



2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் உணவகம் மூடப்பட்டது.

ஆபரேட்டர் மெல்கோ இன்டர்நேஷனல் டெவலப் மென்ட், கடந்த மாதம் வணிகம் 2013ஆம் ஆண்டு முதல் லாபகரமாக இல்லை என்றும், ஒட்டுமொத்த இழப்புகள் 100 மில்லியன் ஹொங்கொங் டொலர்களை (12.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) தாண்டிவிட்ட தாகவும் கூறியது.

ஒவ்வொரு ஆண்டும் பராமரிப்புக் கட்டணத்தில் மில்லியன் கணக்கில் செலவாகிறது. மேலும் ஒரு டசன் வணிகங்கள் மற்றும் நிறுவனங்கள் எந்தக் கட்டணமும் இன்றி அதை எடுத்துக்கொள்வதற்கான அழைப்பை நிராகரித்தன என்றும் மெல்கோ மேலும் கூறியது.

1976ஆம் ஆண்டு மறைந்த கேசினோ அதிபர் ஸ்டான்லி ஹோவால் 'ஜம்போ' மிதக்கும் உணவகம், திறக்கப்பட்டது. சீன ஏகாதிபத்திய அரண்மனை போல வடிவமைக்கப்பட்டு, ஒரு காலத்தில் பார்க்க வேண்டிய அடையாளமாக கருதப்பட்ட இந்த உணவகம், ராணி எலிசபெத் முதல் டாம் குரூஸ் வரை பார்வையாளர்களை ஈர்த்தது. (அ)

## எல். பி. எல். தொடர்:
# வெளிநாட்டு வீரர்கள் தங்களை பதிவு செய்வதற்கான நாள் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 22

இந்த வருடம் நடைபெறவுள்ள எல். பி. எல். 3ஆவது தொடரில் வெளிநாட்டு வீரர்களை பதிவு செய்வதற்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வெளிநாட்டு வீரர்கள் தங்களை பதிவு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பல வெளிநாட்டு வீரர்களாலும் அணி உரிமையாளர்களாலும் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை கருத்தில்கொண்டு பதிவு காலத்தை நீடிக்க தீர்மானித்ததாக கிரிக்கெட் சபை அறிவித்தது.

ஆரம்பத்தில் வீரர்கள் பதிவுகள் ஜூன் 23ஆம் திகதியுடன் நிறைவு பெறுவதாக இருந்தது. புதிய மாற்றத்துக்கு அமைய ஜூன் மாதம் 28ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வெளிநாட்டு வீரர்கள் தங்களைப் பதிவுசெய்யலாம்.

இந்தப் பதிவுகள் வெவ்வேறு தர நிலைகளில் பதிவு செய்யப்படுகிறது. இதற்கு அமைய இன்ரர்நஷனல் ரூபி (சர்வதேச மாணிக்கம்), இன்ரர்நஷனல் சஃபயர் (சர்வதேச நீல மாணிக்கம்), இன்ரர்நஷனல் டயமண்ட் (சர்வதேச வைரம்) ஏ மற்றும் பி, இன்ரர்நஷனல் பிளாட்டினம் (சர்வதேச வன்பொன்) ஆகிய பிரிவுகளில் வெளிநாட்டு வீரர்களின் பதிவுகள் இடம்பெறுகின்றது.

ரூபி மற்றும் சஃபயர் பிரிவுகளில் அணிகளுக்கான தேர்வுக்கு தங்களைப் பதிவு செய்யும் வெளிநாட்டு வீரர்கள் அந்தந்த நாடுகளில் தேசிய கிரிக்கெட் சம்மேளனத்தில் அல்லது சபையில் பதிவு செய்யப்பட்டவர்களாக அல்லது சர்வதேச போட்டிகளில் தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் உலகப் பிரசித்தி பெற்ற வீரர்களாகவும் இருக்க வேண்டும்.

அணிகளுக்கான தேர்வுக்கு தங்களைப் பதிவு செய்யும் ஏனையவர்கள் சர்வதேச கிரிக்கெட் பேரவையில் பூரண அல்லது இணை உறுப்பு நாடொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட சமகால சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அல்லது பிரதான இருபது 20 தொழில்முறை கிரிக்கெட் லீக்குகளில் விளையாடுபவர்களாக இருக்க வேண்டும்.

இந்த சுற்றுப் போட்டியில் நடப்பு சம்பியன் யாழ்ப்பாணம் கிங்ஸ், கொழும்பு ஸ்ரார்ஸ், தம்புள்ளை ஜியான்ட்ஸ், காலி கிளாடியேட்டர்ஸ், கண்டி வோரியர்ஸ் ஆகிய ஐந்து அணிகள் பங்கு பற்றுகின்றன.

இலங்கையில் நடத்தப்படும் அதி உயரிய கிரிக்கெட் தொடரான லங்கா பிறிமியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் 3ஆவது அத்தியாயம் எதிர்வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதியிலிருந்து ஒகஸ்ட் 22ஆம் திகதி வரை கொழும்பு ஆர். பிரேமதாஸ சர்வதேச விளையாட்டரங்கிலும் அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கிலும் நடைபெறவுள்ளது.

(ஐ)



## மீண்டும் வருகிறார் செரீனா வில்லியம்ஸ்

நியூயோர்க், ஜூன் 22

பிரபல ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் ஒரு வருடத்துக்குப் பிறகு மீண்டும் போட்டிகளில் பங்கேற்கத் தயாராக உள்ளார்.

2021 பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ், 4ஆவது சுற்றில் தோல்வியடைந்தார். பிறகு முதல் சுற்று ஆட்டத்தின்போது, காயம் ஏற்பட்டதால் விம்பிள்டன் போட்டியிலிருந்து விலகினார்.

இந்தத் தோல்விகளால் செரீனாவின் 24ஆவது கிராண்ட்ஸ்லம் பட்டத்துக்கான காத்திருப்பு மீண்டும் தொடர்கிறது. கடைசி நான்கு கிராண்ட் ஸ்லம் போட்டிகளின் இறுதிச் சுற்றுகளிலும் தோற்றுள்ளார் செரீனா.

இதுவரை 23 பட்டங்களை வென்றுள்ள செரீனா, இன்னும் ஒரு கிராண்ட் ஸ்லம் பட்டத்தை வெல்லும் பட்சத்தில் மகளிர் ரென்னிஸ் வரலாற்றில் அதிக கிராண்ட்ஸ்லம் பட்டங்கள் வென்றவரான மார்க்ரெட் கோர்ட்டின் சாதனையை சமன் செய்வார். ஆனால், அந்த ஒரு பட்டத்துக்காக மிகவும் போராடிக் கொண்டிருக்கிறார்.

ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியிலிருந்து விலகிய செரீனா வில்லியம்ஸ், காயம் காரணமாக அமெரிக்க ஓப்பன் தொடரிலிருந்தும் விலகினார். கடந்த வருடம் விம்பிள்டன் போட்டியில் கலந்துகொண்ட பிறகு வேறு எந்த ரென்னிஸ் தொடரிலும் செரீனா பங்கேற்கவில்லை.

இந்நிலையில் இங்கிலாந்தின் ஈஸ்ட்போர்ன் நகரில் நடைபெறும் ராத்ஸே சர்வதேச ரென்னிஸ் போட்டியில் விளையாடவுள்ளார் செரீனா வில்லியம்ஸ். ஜூன் 19 முதல் 25 வரை நடைபெறும் இப்போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில் அவர் பங்கேற்கிறார். ஜூன் 27 முதல் தொடங்கும் விம்பிள்டன் போட்டியிலும் அவர் அடுத்ததாக விளையாடவுள்ளார். இதன் காரணமாகவே ராத்ஸே போட்டியில் பங்கேற்க அவர் முடிவெடுத்துள்ளார்.

(ஐ)




## அஸ்வினுக்கு கொரோனா

புதுடில்லி, ஜூன் 22

இந்திய அணியின் கிரிக்கெட் வீரர் அஸ்வினுக்கு கொரோனா தொற்று உறுதியானது. இதனால், அவர் இந்திய வீரர்களுடன் இங்கிலாந்து செல்லவில்லை.

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான கடைசி டெஸ்ட் போட்டி கொரோனா தொற்றால் ஒத்தி வைக்கப்பட்டது. இந்த தொடரை நிறைவு செய்ய இந்திய அணி லண்டன் சென்றுள்ளது.

இந்தத் தொடரில் இந்தியா 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில் இந்தியாவின் சகலதுறை வீரர் அஸ்வினுக்கு கொரோனா தொற்று உறுதியானது.

எனினும், அவர் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதிக்கு முன்னர் இங்கிலாந்து பயணமாகி அணியுடன் சேர்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)



## விம்பிள்டன் தொடரில் விளையாட குடியுரிமை மாற்றிய வீராங்கனை!

லண்டன், ஜூன் 22

விம்பிள்டன் தடையைத் தவிர்ப்பதற்காகக் குடியுரிமையை மாற்றியுள்ளார் ரஷ்யாவைச் சேர்ந்த ரென்னிஸ் வீராங்கனை நடேலா ஸலாமிட்சே.

இந்த வருடம் விம்பிள்டன் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி தொடங்குகிறது. விம்பிள்டன் போட்டியில் ரஷ்ய, பெலாரஸ் வீரர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. உக்ரைன்மீது போரில் ஈடுபடும் ரஷ்யாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக விம்பிள்டன் நிர்வாகம் இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவின் மொஸ்கோவில் பிறந்தவர் நடேலா ஸலாமிட்சே. இவர், தரவரிசையில் 43ஆவது இடத்தில் உள்ளார்.

ரஷ்ய வீரர்களுக்கு விம்பிள்டன் போட்டியில் அனுமதி மறுக்கப்படுவதால், அவர் தனது குடியுரிமையை ஜோர்ஜியாவுக்கு மாற்றியுள்ளார். 29 வயது நடேலா. சமீபத்தில் நடைபெற்ற பிரெஞ்சு ஓப்பன் போட்டியில் எந்த நாட்டையும் சேராதவராகப் பொதுவான கொடியின் கீழ் தனது பெயரைப் பதிவு செய்து விளையாடினார்.

தற்போது விம்பிள்டன் போட்டியில் ஜோர்ஜியா நாட்டைச் சேர்ந்தவராகத் தனது பெயரைப் பதிவு செய்து மகளிர் இரட்டையர் பிரிவில் சேர்பிய வீராங்கனையுடன் இணைந்து விளையாடவுள்ளார்.

இந்நிலையில் நடேலாவின் முடிவில் தங்களுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என விம்பிள்டன் நிர்வாகம் அறிவித்துள்ளது.

(ஐ)

## கெமர் ரோச் சாதனை

ஜமைக்கா, ஜூன் 22

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் கெமர் ரோச் தனது அணியின் முன்னாள் வீரர் மைக்கல் ஹோல்டிங்கின் சாதனையை சமன்செய்துள்ளார்.

பங்களாதேஷ் அணிக்கு எதிராக விளையாடிவரும் மே.இ. தீவுகள் அணியின் கெமர் ரோச் தனது இரண்டு இனிங்ஸிலும் சேர்த்து 7 விக்கெட்களை எடுத்ததன் மூலம் 219 விக்கெட்களுடன் மே.இ. தீவுகள் அணியில் அதிக டெஸ்ட் விக்கெட் எடுத்தவர்கள் பட்டியலில் 7வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

மைக்கல் ஹோல்டிங் இவரை விட சிறந்த சராசரி வைத்துள்ளதால் 6ஆவது இடத்தில் உள்ளார். அன்ட்ரிவ் கொட்னி வோல்ஸ் 519 விக்கெட்டுகள் எடுத்து இந்த பட்டியலில் முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


மே.இ. தீவுகள் அணி பங்களாதேஷுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இது குறித்து கெமர் ரோச் கூறுகையில்,

இந்த சாதனை வரிசையில் எனது பெயர் வந்தது மிகவும் பெருமையாக உள்ளது.

தலைசிறந்த வீரர்களுக்கு மத்தியில் எனது பெயர் இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது - என்றார்.

(ஐ)



# எரிபொருள் நெருக்கடி அரசியல் பிரச்னையல்ல

## கூறுகிறார் பந்துல குணவர்தன

கொழும்பு, ஜூன் 22

எரிபொருள் நெருக்கடியானது தொழில்நுட்பப் பிரச்னையே தவிர அது அரசியல் பிரச்னை அல்லவென போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தமது குடும்பத்தினரும் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் காத்திருப்பதால், மக்கள் படும் இன்னல்களை தன்னால் புரிந்து கொள்ள முடிவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

(அ)

# ஜோன்ஸ்டனின் மனு நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 22

பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தாக்கல் செய்த ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் தம்மை கைது செய்வதனை தடுக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்தநிலையிலேயே குறித்த மனுவினை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மே 9ஆம் திகதி பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களால், காலி முகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு முன்பாக அமைதி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த சம்பவத்தின் சந்தேகநபராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பெயரிடப்பட்டுள்ளதுடன், அவரை கைது செய்வதற்கான உத்தரவை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.

இதனை அடுத்து அவர் தாம் கைது செய்யப்படுவதை தடுக்க கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவின் அடிப்படையில் அவரை நீதிமன்றில் சரணடைய மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் சரணடைந்த அவருக்கு அன்றைய தினமே பிணை வழங்கப்பட்டிருந்தது. (அ)

# மத்திய வங்கியின் ஆளுநராக நந்தலால் வீரசிங்க தொடர்வார்

கொழும்பு, ஜூன் 22

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கலாநிதி நந்தலால் வீரசிங்கவே தொடர்ந்தும் பதவி வகிப்பார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் அவர் இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநராக நந்தலால் வீரசிங்கவை நீடிக்குமாறு அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (அ)

## பிரசன்னவுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 22

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் மகா சங்கத்தினருக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டை உடனடியாக விசாரிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான முறைப்பாடொன்று இலங்கை பொலிஸ் தலைமையகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

“உயிர்த்தெழுதல் - நீதியின் மக்கள்” அமைப்பின் பிரதிநிதிகள் பங்கேற்புடன் நேற்று முற்பகல் 11 மணிக்கு இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)


## வீட்டுத் தோட்டம் செய்வோம்

வளம் கொழிக்கும் பூமி என
வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்
பெயர் பொறித்த நம் தாய்நாடு.
இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்
உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.
மூன்று வேளை உணவு இருவேளையாகவும்
ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.
பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே
நிழலாடுகின்றன...!



**போதும்...! ஏந்திய கைகள்**
**சற்றே உயரட்டும்**

நாம் வாழப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!

**வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்**
**நமது பசியை நாமே போக்க...**
**எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!**

பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு
போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!
திட்டமிடலும் உழைப்புமே
நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!

www.dantv.tv

ஈழநாடு


# தம்மிக்கவுக்கு எதிரான மனுக்கள் உயர்நீதிமன்றத்தால் நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 22

தம்மிக்க பெரேரா பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்பதை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தம்மிக்க பெரேரா தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்பதை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து மனுக்கள் மீதான விசாரணை நேற்று இடம்பெற்றிருந்தது.

இதன்போதே குறித்த மனுக்களை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தம்மிக்க பெரேராவின் பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் இலங்கையின் அரசியலமைப்பை மீறும் செயலாகும் என்பதால் உடனடியாக அதனை இரத்துச் செய்யுமாறு இதன்போது மனுதாரர்கள் கோரியிருந்தனர்.

இதேவேளை, தம்மிக்க பெரேரா இன்று பாராளுமன்ற உறுப்பினராக பதவி பிரமாணம் செய்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு பதிலாக தம்மிக்க பெரேரா தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

## மரண அறிவித்தல்



தோற்றம்
17 - 11 - 1979

மறைவு
12 - 06 - 2022

# பாக்கியநாதன் ராகவன்

வவுனியா செக்கட்டிப்பிலவைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பாக்கியநாதன் ராகவன் அவர்கள் 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற பாக்கியநாதன், கண்மணி தம்பதிகளின் பாசமிகு புதல்வரும், ரவீந்திரன் ராஜ செல்வி(பிரான்ஸ்) தம்பதிகளின் பாசமிகு மருமகனும், கிருஜா அவர்களின் அன்புக் கணவரும்,துஷானி மற்றும் நிஷானி ஆகியோரின் பாசமிகு தந்தையும்,தேவகி, ரகுநாதன், வைதேகி, காலஞ்சென்ற வாணதி, சத்தியநாதன் (லண்டன்), காலஞ்சென்ற ஆனந்தி, ஜானகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருசாந்த், பகிர்தன், தயாநிதி, சுஜாதா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ஆரணி, ஆரபி, அபிநயன், சயூறி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

கிரியை
Sunday, 26 Jun 2022 11:00 AM - 1:30 PM
Barnet Multi Cultural Community Centre Algernon Rd, London NW4 3TA, United Kingdom

தகனம்
Sunday, 26 Jun 2022 2:00 PM
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சத்தியநாதன் - சகோதரன்**

தொடர்புகளுக்கு:
**சத்தியநாதன் - சகோதரன்** Mobile : +447814025775
**கிருஜா - மனைவி** Mobile : +447480497537
**ஜானகி - சகோதரி** Mobile : +94776453091
**ரகுநாதன் -சகோதரன்** Mobile : +94774392837
**சிவஞானசுந்தரம் - மாமா** Mobile : +447534303156
**பாலேஸ் - சகோதரன்** Mobile : +447507588956
**ரமேஷ்வரன் - சகோதரன்** Mobile : +447866895707
**ஸ்ரீ - மாமா** Mobile : +447990639689

## மேலும் 5.75...

மான உதவி, மொத்தம் 5.75 மில்லியன் டொலர், பண உதவி, குறுகிய கால வேலைகள் மற்றும் நெருக்கடியால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு அவர்களின் அடிப் படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நேரடியாக விதைகள் போன்ற விவசாயப் பொருட்களை வழங்கும்.

சர்வதேச அபிவிருத்திக்கான யு.எஸ். எய்ட் ஊடாக இந்த புதிய மானிய நிதி யுதவியானது, இலங்கையர்களின் பொரு ளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய் வதற்காக, கடந்த வாரம் ய்.எஸ். எய்ட் ஊடாக 6 மில்லியன் டொலர் மற்றும் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக 120 மில்லியன் டொலர் புதிய கடன்களை வழங்குவதாக அறிவித்ததை அடிப்படையாகக் கொண்டது.

"சர்வதேச நன்கொடையாளர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்திய வேண்டுகோள், இலங்கையில் வெளியேறி யுள்ள பல பரிமாண உணவுப் பாதுகாப்பு நெருக்கடி' குறித்து எச்சரித்தது," என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் விளக்கினார்.

"இன்று நாங்கள் அறிவிக்கும் புதிய உதவி, அந்த சிக்கலான சில சிக்கல்களைத் தீர்க்கும். இந்த நெருக்கடியால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கை யர்களுக்கு இந்த நிதி நேரடியாகச் சென் றடைவதை உறுதி செய்ய நாங்கள் கடு மையாக உழைத்து வருகிறோம்.

இன்று அறிவிக்கப்பட்ட நிதியுதவியா னது, பாரம்பரியமாக அதிக வறுமை விகிதங்களை அனுபவிக்கும் மற்றும் குறிப்பாக நெருக்கடியால் பாதிக்கப்படும் சமூகங்களில் உள்ள குறுந்தொழில்களை ஆதரிக்கும். கூடுதலாக, சமூகம் சார்ந்த பேரிடர் மேலாண்மைக் குழுக்களுக்குத் தயார்படுத்தவும், பதிலளிக்கவும், இறுதி யில் நெருக்கடிகளிலிருந்து மீளவும் உதவும்.

எதிர்வரும் மாதங்களில், இலங்கை மக்களின் உடனடி மற்றும் நீண்ட காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் இலங்கையில் அதன் குறிப்பிடத்தக்க முதலீடுகள் மற்றும் உதவித் திட்டங்களைச் சேர்க்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இந்த முயற்சிகள் ஆறு தசாப்தங்கள் மற் றும் இலங்கையில் சுற்றுலா, சிறு வணிகங் கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காலநிலை தழுவல் மற்றும் சிவில் சமூகத்தை வலுப் படுத்திய அமெரிக்க மக்களின் 2 பில்லி யன் டொலர் வெளிநாட்டு உதவியை உருவாக்குகின்றன." என்றும் ஜூலி சங் குறிப்பிட்டார்-என்றுள்ளது. (அ)

## பெற்றோல்...

திரமே நாடளாவிய ரீதியில் பகிர்ந்தளிக் கப்படுவதாக பெற்றோலிய மொத்த களஞ்சியசாலையின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் நாளாந்தம் 2500 மெற் றிக் தொன் பெற்றோல் விநியோகிக்கப் பட்டது.

எனினும், தற்போது பெற்றோல் தொகை குறைவடைந்து செல்வதால், வரையறைகளுக்கு உட்பட்டு அதனை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

இதனிடையே, நேற்றைய தினம் 5000 மெற்றிக் தொன் டீசல் நாடளாவிய ரீதி யில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

டீசல் விநியோகம் எவ்வித சிக்கலு மின்றி முன்னெடுக்கப்படுவதாக பெற் றோலிய மொத்த களஞ்சியசாலையின் அதிகாரி குறிப்பிட்டார்.

இதேவேளை, தனிநபர்கள் அல்லது நிறுவனத்திற்கு தேவைக்கு அதிகமான எரிபொருளைச் சேமித்து வைப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித் தார். (அ)

## ஐக்கிய...

லமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர் பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபா நாயகர் சமர்ப்பித்தார்.

அதன்படி, 21வது திருத்தத்தின் பல சரத்துகள் அரசியலமைப்புக்கு முரணா னது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள் ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே, அந்த சரத்துகளை நிறை வேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான் மையும் சர்வஜன வாக்கெடுப்பும் அவசி யம் என உயர்நீதிமன்றம் தமக்கு அறிவித் துள்ளதாக சபாநாயகர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் 21ஆவது திருத்தச் சட்டத்தை தயாரிப்பதில் தானும் பங்காற்றினார் என தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அரசாங்கம் தயாரித் துள்ள அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அனுமதி வழங் கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச் சர் ஹரின் பெர்னாண்டோ ருவிட்டரில் பதிவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது. (அ)

## பாராளுமன்ற...

எம்.பிக்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

முன்னதாக, அரசுக்கு எதிர்ப்பு தெரி விக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி ஒரு வாரத்துக்கு பாராளுமன்ற அமர்வு களை புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்து வெளி யிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, பாராளுமன்ற அமர்வுகளை இன்று (நேற்று) முதல் புறக்கணிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளோம்.

நாங்கள் பாராளுமன்றத்துக்கு வந்து நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. மேலும் வரும் நாட்கள் மற்றும் வாரங் கள் கடுமையானவையாக இருக்கும் என்ற அரசாங்கத்தின் எச்சரிப்பைக் கேட்க நாங்கள் விரும்பவில்லை.

மேலும் அரசியலமைப்பு சீர்திருத் தங்கள் குறித்து அரசாங்கம் சரியான உத்தரவாதத்தை வழங்கவில்லை - என் றார். (அ)

## ஸ்ரீலங்கா...

காசத்தை அரசுக்கு வழங்கி சபை அமர்வி லிருந்து வெளியேறிச் செல்கின்றோம் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகு மார திஸாநாயக்க நேற்றைய அமர்வில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி ஒரு வாரத்துக்கு அதாவது இந்த வாரம் முழுவதும் பாராளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக் கது. (அ)

## பணவீக்கம்...

களம் அறிக்கையிட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ணுக்கு அமைய 2022 மார்ச் மாதம் 21.5வீதமாக இருந்த பணவீக்கம் 2022 ஏப்ரலில் 33.8வீதமாக அதிகரித்திருந்த நிலையில் மே மாதத்தில் 45.3வீதமாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, உணவுப் பணவீக்கம் 58 சதவீதமாகவும், உணவு அல்லாத பிரிவின் வருடாந்த பணவீக்கம் 34.2 சதவீதமாகவும் காணப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

## சவர்க்காரம்,...

பற்பசை 310 ரூபாயாகவும் அதிகரித்துள் ளன.

நூடில்ஸ் பைக்கெற் ஒன்று 120 ரூபா யாக உயர்ந்துள்ளது. முன்தாக இந்த நூ டில்ஸ் பைக்கெற் 55 -60 ரூபாயாகவும் பின்னர் 8 -90 ரூபாயாகவும் அதிகரித் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ் இளைஞர்கள்மீது அரசு காட்டுமிரண்டித்தன தாக்குதல்!

## சிறீதரன் எம். பி.

கொழும்பு, ஜுன் 22

தென்னிலங்கையில் சிங்கள இளை ஞர்கள் போராடும்போது, அவர்களைத் தமது பிள்ளைகளாகப் பார்க்கும் அரசு தமிழ் இளைஞர்களுக்கு எதிராக இராணு வம் மூலம் காட்டுமிராண்டித்தமான தாக்குதல்களை மேற்கொள்கிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப் பாணம் மாவட்ட எம்.பி. சிவஞானம் சிறீதரன் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற குற்றவியல் நடவடிக்கை கோவை திருத்தச் சட்டமூல விவாதத்தில் உரை யாற்றுகையிலேயே இவ்வாறு குற்றஞ் சாட்டிய அவர் மேலும் பேசுகையில்,

"கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு எரிபொருள் வழங்கப்படாத நிலையில் இரவு 7.30 மணியளவில் வரிசையில் காத்திருந்தவர்களில் ஒருவரான மனநலம் குன்றிய பொதுமகன் ஒருவர் அங்கிருந்த வர்களிடம் முரண்பட்ட நிலையில் அங்கு வந்த விசுவமடு 572 ஆம் படைப் பிரி வைச் சேர்ந்த இராணுவத்தினர் குறித்த பொதுமகனை தமது முகாமுக்கு இழுத் துச் சென்று பொல்லுகளாலும் ஆயுத முனைகளாலும் பலமாகத் தாக்கி இரத் தக்காயங்களை ஏற்படுத்தியிருந்தனர்.

இதனை அவதானித்த அதே பிரதேசத் தைச் சேர்ந்த இளைஞர்கள் இராணுவக் காவலரணுக்கு அருகே சென்று குறித்த பொதுமகனைத் தாக்கியமைக்கான கார ணத்தைக் கேட்டபோது இராணுவத்தி னர் அவர்களையும் அச்சுறுத்தி வெளி யேற்றியுள்ளனர். அதன்பின்னர் இரு கன ரக வாகனங்களில் பொல்லுகளோடும் கூரிய ஆயுதங்களோடும் அழைத்துவரப் பட்ட பெரும் எண்ணிக்கையிலான இரா ணுவத்தினர் எரிபொருளுக்காக வரிசை யில் காத்திருந்த பெண்கள், முதிய வர்கள் மற்றும் இந்தச் சம்பவத்தோடு எவ்வித தொடர்புமற்ற வீதியால் சென்றவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக் களை மிக மோசமாகத் தாக்கியுள்ளனர்.

இதில் 6 பேர் இராணுவத்தினரின் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

அன்றாட சீவியத்துக்காக, விவசாயத் துக்காக நாள் முழுதும் எரிபொருளுக்கா கக் காத்திருந்த மக்கள் மீது காரணமின்றி இராணுவத்தினர் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்குதலை மேற்கொண்டுள் ளமை அப்பகுதி மக்களிடையில் பாரிய அதிருப்தியையும் அதியுச்ச கோபத் தையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் விளை வாக பிரமானந்தமாறு பிரதான வீதியின் 3 இடங்களிலும், விசுவமடுவிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு மக்களை அச்சுறுத்தும் வகையிலான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதித்துள்ளது.

எனவே, சமூக வன்முறைகளுக்கு வழி கோலும் வகையிலும் மனிதாபிமான மற்ற முறையிலும் இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் சம்ப வத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் பொதுப் பயன்பாட்டு இடங்களில் இராணுவத் தலையீடுகளைத் தவிர்ப்பதற் கும் துரித நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யு மாறு இந்த உயர்ந்த சபையினூடாக ஜனாதிபதியையும் சம்பந்தப்பட்ட அமைச் சரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நாட்டிலே காலிமுகத்திடலிலும் ஒரு போராட்டம் நடக்கின்றது. தென் பகுதியிலுள்ள சிங்கள இளைஞர்கள் போராட்டங்கள் நடத்துகின்றார்கள். பொலிஸாரின் காவலரண்களைத் தள்ளுகின்றார்கள். இராணுவத்தினரைத் தள்ளுகின்றார்கள்.

இலங்கையில் சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக் கும் தனித்தனி சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. தென்னிலங்கையில் சிங்கள இளைஞர்கள் போராடும்போது, அவர்களை உங்களது பிள்ளைகளாகப் பார்க்கின்றீர்கள். தமிழர்களை மாற்று முக மாகப் பார்க்கின்றீர்கள் - என்றார். (ஐ)

# இலங்கையில் நடந்தது இனப்படுகொலையே!

## நல்லூரில் நிறைவேறியது தீர்மானம்!

யாழ்ப்பாணம், ஜுன் 22

இலங்கையின் இறுதிப் போரில் இடம் பெற்றது இனப் படுகொலையே என்று நல்லூர் பிரதேச சபையில் நேற்று ஏகமன தாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேற்றைய அமர்வின்போது கனடா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இனப் படுகொலை தீர்மானம் வரவேற் கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான் அதற்கு நீதி கிடைக்க வேண்டும் குற்ற வாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேற்றைய அமர்வில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் அ. மது சூதன் இந்த பிரேரணையை கொண்டுவந் தார். அது ஏகமனதாக தீர்மானமாக நிறை வேற்றப்பட்டது. (ஐ)

## தம்மிக பெரேரா...

அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, கடந்த 9ஆம் திகதி தனது பதவியை இராஜிநாமா செய் தையடுத்து, அந்த பதவி வெற்றிடத்திற்கு தம்மிக பெரேரா நியமிக்கப்பட்டார்.

கட்சியின் தேசிய பட்டியல் பாராளு மன்ற உறுப்பினராக தம்மிக பெரேராவை நியமித்து தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்த மானி அறிவித்தலை வெளியிட்டப்பட்டது.

தம்மிக பெரேராவை, சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமித்தமையை சவாலுக்கு உட்படுத்தி, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 5 அடிப்படை உரிமை மனுக்களையும் உயர்நீதிமன்றம் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே நேற்று நிராகரித்தது. இதனையடுத்தே அவர் இன்று எம்.பியாக பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார். (ஐ)

## எரிபொருள்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் அனைத்து மின்சார விநி யோக சேவைகளும் அத்தியாவசிய சேவை யாக மாற்றப்பட்டுள்ளன. (அ)

## பொறுமைக்கும்...

கடந்த 9ஆம் திகதி குருந்தூர் மலை யில் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய் வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் விநோ நோகராதலிங்கம் ஆகியோர் பாரிய தடை களை ஏற்படுத்தினர்.

இவர்களால், அழைத்து வரப்பட்ட வர்கள் கிராம மக்கள் அல்லர். அவர்கள் ஏனைய பகுதிகளில் இருந்து அழைத்து வரப்பட்டவர்கள்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu




# அக்கரைப்பற்று மாநகர சபையால் உள்ளக உதைபந்து அரங்கு திறப்பு

*மட்டக்களப்பு, ஜூன் 22*

பிராந்திய இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் எண்ணக்கருவில் அக்கரைப்பற்று மாநகர சபையின் நிதி ஒதுக்கீட்டில் அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உள்ளக உதைபந்து அரங்கினை பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைத்து கையளிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது தேசிய காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உள்ளக அரங்கின் முதலாவது உதைபந்து போட்டியை ஆரம்பித்து வைத்ததுடன், இவ்வரங்கில் இடம்பெறும் முதல் போட்டியில் விளையாடிய வீரர்களுக்கு நினைவுச் சின்னங்களையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

பிராந்திய விளையாட்டு வீரர்களின் ஆட்டத் திறனை ஊக்குவித்து, அவர்களை தேசிய மற்றும் சர்வதேச தரம் வாய்ந்த வீரர்களாக பட்டை தீட்டுவதுடன் ஆரோக்கியமும், ஒழுக்க விழுமியங்களும் மிகுந்த இளைஞர் சமுதாயத்தினை கட்டியெழுப்புவதும் இவ்வுள்ளக மைதானம் உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கங்கள் ஆகும் என மாநகர பிதா அதாவுல்லா அகமட் ஸகி இந்நிகழ்வின் போது சுட்டிக் காட்டினார். (அ)






## மரண அறிவித்தல்



தோற்றம் 18 - 01 - 1994
மறைவு 14 - 06 - 2022

### விஜயாலயன் மதியழகன்

Member of Ottawa Police Services, Former Member of Canadian Armed Forces

முல்லைத்தீவு முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், கனடா ஒட்டாவா நகரை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயாலயன் மதியழகன் அவர்கள் 14.06.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், மதியழகன் இராஜதுரை, விஜயராணி மதியழகன் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரரும்,கார்த்திகா கதீசன் அவர்களின் அன்புச் சகோதரரும்,கதீசன் அருளானந்தம் அவர்களின் மைத்துனரும், கவினிகா அவர்களின் பாசமிகு மாமனாரும்,காலஞ்சென்ற இராஜதுரை பொன்னம்பலம் (Srilankan Parliament Hansard Reporter), இரத்தினேஸ்வரி இராஜதுரை தம்பதிகள், நாகரத்தினம் கந்தையா, இராஜலட்சுமி நாகரத்தினம் தம்பதிகளின் அன்புப் பேரனும்,சற்சுதன்(ஜவான்)- நந்தினி, சந்திராதரன்- தண்மதி(இலங்கை), மோகனதாஸ்(கெங்கா)- கௌரி(கனடா), இன்பதாசன்(மாவீரர்- பரணி), சந்திரரூபன்- சிவலோசினி, சதீசன்- செந்தூரி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மருமகனும்,மேகநாதன்- ரஞ்சினி, மணிவண்ணன்- குகாயினி ஆகியோரின் பெறாமகனும், மதிவதனி- சண்முகநாதன், மேகலா- சாந்திகுமரன் ஆகியோரின் அன்பு மருமகனும்,ஆதிரையன், எழில்நிலா, சாம்பவி, அருண்நிலா, ஆரணிகா, இளந்திரையன், சுடர், சயூரி, சரிதன் ஆகியோரின் பாசமிகு மச்சானும் ஆவார்.

*பார்வைக்கு*
Sunday, 19 Jun 2022 5:00 PM - 9:00 PM
Thursday, 23 Jun 2022 3:30 PM - 4:30 PM
Capital Funeral Home & Cemetery 3700 Prince of Wales Dr, Nepean, ON K2C 3H2, Canada

*தகனம்*
Thursday, 23 Jun 2022 6:00 PM
Capital Funeral Home & Cemetery 3700 Prince of Wales Dr, Nepean, ON K2C 3H2, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கெங்கா - மாமா**

*தொடர்புகளுக்கு:*
**மதியழகன் - தந்தை** Mobile : +16136204488
**விஜயராணி - தாய்** Mobile : +16138238643
**கெங்கா - மாமா** Mobile : +14169304577
**கார்த்திகா - சகோதரி** Mobile : +16132625735
**கதீசன் - மைத்துனர்** Mobile : +16132626227

## மரண அறிவித்தல்



பிறப்பு 03 - 10 - 1936
இறப்பு 17 - 06 - 2022

### பெரியதம்பி இராஜநாயகம்

**வழக்கறிஞர், ஆசிரியர் - தமிழ் ரைம்ஸ்**

யாழ்ப்பாணம் - சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, இங்கிலாந்தின் Bexley, லண்டனில் வசித்தவருமான பெரியதம்பி இராஜநாயகம் கடந்த வெள்ளிக்கிழமை (17.06.2022) அன்று லண்டனில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - பசுபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சேனப்புவின் மருமகனும் காலஞ்சென்ற ரெஜினாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற Dr. அரசரத்தினம், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான நடராஜா, பேரி.சண்முகநாதன் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்வரத்தினம், சிவயோகநாதன், அனுலா, காலஞ்சென்ற சிவசோதி, சுமனா, காலஞ்சென்றவர்களான சிசிலியா, அலோசியஸ் மற்றும் அரசரத்தினம், அன்ரன் ஜேம்ஸ், கிறிஸ்ரின், பிறின்ஸ் ஆகியோரின் மைத்துனரும், ஆனந்தி, ஆனந்தா, ருத்ரன், சாந்தி, செல்வபாரதி, கிருஷாந்தி, தமயந்தி, பிரியந்தி, சுபோ, வாசனா, சிவச்செல்வன், மேனகா, காரின், ஜீன்கிளாட், ஸ்ரெபி, அந்தோனி, சர்மினி ஆகியோரின் அன்பு மாமாவும் மிதுசா, நரைன், ரம்யா, சேயோன், மஹிஷி, லக்ஷ்மி, அசென், அருண், அமிரா, காய்தன், அரோசன், ஜெய்சன், சயானா, மிலா, அவா, ஆரியா, டெமி, தேவ்மினி, இஷாலீ ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ருத்ரன் (மருமகன்).**

*தொடர்புகளுக்கு :*
**பரமேஸ்வரி (சகோதரி) - +94112508467**
**மகேஸ்வரி (சகோதரி) - +94112638579**
**ருத்ரன் (மருமகன்) - +447579332416**
**சிவசெல்வன் (மருமகன்) - +447704636932**
**தமயந்தி (மருமகள்) - +447886829952**

## மரண அறிவித்தல்



பிறப்பு 16 - 06 - 1961
இறப்பு 16 - 06 - 2022

### சோமசுந்தரம் ரவீந்திரன்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பூர்வீகமாகவும், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Épinay-sur-Seine ஐ வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ரவீந்திரன் அவர்கள் 16.06.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம், பரமேஸ்வரி (வவுனியா) தம்பதிகளின் அன்பு மகனும், துரைராசா சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும்,ராகினி அவர்களின் அன்புக் கணவரும்,கஜீத்தன், சர்மினி, பிரவீண்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,மோகனதாஸ்(சுவிஸ்), வரததாஸ்(சுவிஸ்), சுஜிதா(இலங்கை), சித்திரா(பிரான்ஸ்), சுதாகரன்(இலங்கை), நந்தினி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ராதாரஞ்திதம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற குலசிங்கம், நகுலேஸ்வரன், சுகந்தி, ஆனந் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

*பார்வைக்கு :*
Monday, 20 Jun 2022 3:00 PM - 4:00 PM
Wednesday, 22 Jun 2022 3:00 PM - 4:00 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

*கிரியை :*
Thursday, 23 Jun 2022 9:00 AM - 11:30 AM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

*தகனம் :*
Thursday, 23 Jun 2022 12:30 PM - 1:30 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**நகுலேஸ்வரன் சித்திரா (மைத்துனர்)**

தொடர்புகளுக்கு
**பரமேஸ்வரி - தாய் Mobile : +94752390155**
**நகுலேஸ்வரன் சித்திரா - மைத்துனர்**
**Mobile : +33652323380**
**ரதீஸ், பிரியா - உறவினர்**
**Mobile : +33612191376**

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.05 மணி : உளநலம்-காசி ஜீவலிங்கம் (யாழ்பாவாணன்)



7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மௌனகுரு,மாப்பிள்ளை திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ
08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-குணரெட்ணம் - விவசாய அமைச்சு
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு